www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 9.10 திருவள்ளுவர் ஆண்டு 2053

14.05.2022 - 13.06.2022

ISSN : 2195-6480

அகரம் 12 ஆண்டு



தமிழீழ விடுதலைப் போருக்கு நிதி திரட்டியது

## குற்றம் அல்ல அது என் உரிமை!

உயர்ந்து ஒலிக்கும் நாதன் தம்பியின் குரல்







## நனைந்த கள்ளனும் நக்கின கள்ளனும்?

யாருக்கு என்ன நன்மை

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

# Dortmund மாநகரில் மளிகை உலகின்

BIGG BOSS

TKS BEST FOODS



















V BOX

~~149€~~

பெறுமதியுள்ள



**119€*** கிடைக்கும்



## மலிவும் தரமும் என்றும் உங்கள் TKS

Haldiram's

Aachi — The Mother of Good Taste

Elephant House

GRB



TRS

Tilda — Legendary Rice

Maliban

MTR

Rheinische Str.79-44137-Dortmund

tksbestfoods

0049 231 950 468 83

www.tksbestfoods.de

tks-bestfoods@web.de




ortel MOBILE




## 20 countries

### 250 minutes

250 minutes from Germany to
20 countries.

250 minutes from Germany to EU

Internet Flat Highspeed up to 8 GB

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app
(offer ends 15 december 21)

Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "

**19,99€***




## Germany Flat

### 15 GB Internet

National Flat call rate

500 minutes from Germany to EU


Internet Flat 15 GB Highspeed

Secure your +5 GB bonus with the Ortel Mobile app
(offer ends 15 december 21)

Surf and make calls within the EU

Now for 4weeks for "

**24,99€***




## 11 GB Internet Flat


Highspeed up to 11 GB

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app
(offer ends 15 december 21)

Internet telephony available
Surfing the Internet within the EU

Now for 4weeks for "

**19,99€***



**OHNE PAUSE NACH HAUSE.**

Ortel. Wir sprechen Deine Sprache.

Google play App Store

Aufladbar mit: ortel MOBILE O2 e-plus




AKARAM
# அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 சித்திரை 2022 - 13 வைகாசி 2022

சுவடி / ISSUE 9.11



**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)



**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. Box 13 06 31,**
**44316 Dortmund,**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**
Email: editor@akaram.eu



ISSN 2195-6480

**www.akaram.eu**



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


## நுழைவாயில்...




**‘அகரம்’ வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல்பெருமக்களுக்கும் எல்லா நலமும், வளமும் பெருக இறையருளை வேண்டுகிறது. உங்களின் நல்ஆதரவோடு அகரம் 12ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

இலங்கையில் இராசபக்சேக்களின் குடும்பக் கொடுங்கோலாட்சி, சுமார் 3 வார கால சிங்கள மக்களின் போராட்டத்தால் ஒரு முடிவுக்கு வந்து விட்டதாக செய்திகள் அறிவிக்கின்றன. மகிந்த இராசபக்ச பிரதமர் பதவியைத் துறந்த பின்னரும், நாட்டை விட்டு வெளியேற முடியாமல் திரிகோண மலைக் கடற்படை முகாம் பகுதியில் ஒளிந்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடைசி முயற்சியாக அதிபர் கோட்டபாய தனி மனிதராகக் கட்சி உறுப்பினர் எவரும் இல்லாத, தொடர் தோல்விகளின் நாயகன் ரணில் விக்கிரம சிங்காவைப் பிரதமராக ஆக்கி, அரசை அமைக்கக் கேட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சல்லிக் காசும் இல்லாத, கடன்களையும், வட்டிகளையும் கட்ட முடியாத வங்குரோத்து நிலை அடைந்து, கடனுக்காக அலையும் நிலையில் வயதான ரணில் எப்படி அமைச்சர்களையும், பிரதிநிதிகளையும் தேடி ஒரு அரசை அமைக்கப்



போகிறார்? என்கிற கேள்வியும் எழுகிறது.

கடைசியாக உலக நிதி நிறுவனத்திடம் கடன் பெறலாம் என்கிற எண்ணம் உள்ளது. இன்றுள்ள இலங்கையின் நிதி நிலைமையில் சும்மா யாரும் 80,000 கோடி அளவான அமெரிக்க டொலர்களைக் கடனாகத் தரப் போவதில்லை. ஆனால், அந்த நிறுவனத்தில் ஒரு உறுப்பினராக இந்திய அரசு, அதன் நிதி அமைச்சரான நிர்மலா சீதாராமனின் நியமனம் செய்திருப்பது இந்தியாவின் செல்வாக்கால் கடனைப் பெற முடியும் என ரணிலும், கோட்ட பாயாவும் நினைக்கலாம்.

அதே சமயத்தில் இத்தனைக்கும் பின்னால் இந்தியா கண்ணை மூடிப் பால் குடித்த பூனை என்கிற சந்தேகத்தையும் எழுப்புகிறது. ஆரியக் கூத்து ஆடினாலும், காரியத்தில் கண்ணாக இருக்கும் உலக நிதி நிறுவனம் விதிக்கும் நிபந்தனைகளின் தாக்கம் இப்ப உள்ள தாக்கத்தை விடப் பல மடங்கு சுமையைப் பல தசாப்தங்களுக்கு இலங்கை மக்கள் மீது சுமத்தும் என்பது அறுதியான உண்மை.

அந்தச் சுமை இன்றுள்ள நோயை விடக் கொடியதாக இருக்கும். அதனை இந்தியாவால் உலக நிதி நிறுவனத்தின் நிபந்தனைகளை எந்த அளவுக்கு இலகுவாக்க முடியும்? என்கிற கேள்வியும் எழுகிறது. தமிழ் மக்கள் மீது கடந்த 76 ஆண்டுகளுக்கும் அதிகமாக வன்செயல்கள், கொலைகள், கொள்ளைகள், கலவரங்களைச் செய்த சிங்களம் 2009இல் மிகப் பெரும் இனப் படுகொலைகயைச் செய்துவிட்டு, அதற்கான பழியையும் எம் மீது சுமத்தி வருவதைப் பார்க்கிறோம்.

இப்பொழுது ஜெகத் கஸ்பார் போன்ற பச்சோந்திகள் மூலம், புலம் பெயர் ஈழத் தமிழர்களை முதலீடு செய்யுங்கள் என்கிற பெயரில், அவர்களின் நிதி வளங்களைக் கபலீகரம் செய்யும் திட்டங்களையும் காண முடிகிறது.

தமிழர்களை அழிக்கச் சிங்கள அரசுகள் பட்ட கடன்களுக்கும், தமிழரே பொறுப்பு என்பதுபோல சிலர் பேசி வரும் நிலையில், இப்பெரும் கடன் சுமைக்கு நாம் எப்படிப் பொறுப்பு ஏற்க முடியும்?. எனவே, இந்த சிங்கள ஆட்சியாளர்கள் செய்த மோசடிகளை மறைக்க உருவாக்கப்படும் எந்த அரசையும் எம் இனம் ஏற்க முடியாது.

சிங்கள மக்கள் செய்த சுத்திகரிப்பைப் போன்று, தமிழ் மக்களும் போலித் தமிழ்த் தேசிய அரசியல் செய்யும் கனவான்களை எதிர்த்துப் போராடி, விரட்டினால் மட்டுமே நம் இனம் இந்நாட்டில் வாழ முடியும்.

அடுத்தத் தமிழ்த் தலைமுறை எதிர்நோக்கும் வாழ்வா? சாவா? பிரச்சினையாகச் சகல வசதிகளையும் பெற்றுள்ள உலக அரசுகளின் சதுரங்க அரசியலில் வெல்லத் தேவையான வரலாற்றுத் தரவுகளையும், அவற்றை வாதத் திறமையால் பெறத் தேவையான ஆற்றலையும் வளர்க்க வேண்டும்.

நாம் நிறையச் சிந்திக்க வேண்டிய காலம் இது. நண்பர்கள் யார் ? எதிரிகள் யார்? துரோகிகள் யார்? எனத் தெரிந்து கொள்ளாமல், எம் இனத்தை யாராலும் காப்பாற்ற முடியாது. முதலில் எம் மண்ணையும், மக்களையும் இனத் துரோகிகளிடம் இருந்து காப்பாற்ற வேண்டும்.

மீண்டும் வரும் வரை விடை பெறும்...

**ஆசிரியர்,** அகரம் குழுமம்

த. எதிர்மன்னசிங்கம்

# 2005இல் தலைவர் பிரபாகரன் அடித்த ஆப்பு





# சிங்களத்தின் திமிரை 2022இல் அழிக்கிறது



'யாழ்ப்பாணத்தில் கலப்பு மின் திட்டங்களை நடைமுறைப் படுத்துவது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் இலங்கையும், இந்தியாவும் கைச்சாத்திட்டுள்ளன. ஏற்கனவே இந்தத் திட்டம் சீனாவிடம் வழங்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டம் முதலில் சீனாவின் **MS/Sinosar-Etechwin** கூட்டு முயற்சிக்கு வழங்கப் பட்டது. எனினும், இந்தியா எழுப்பிய ஆட்சேபனைகளைத் தொடர்ந்து அந்தத் திட்டம் மறுபரிசீலனை செய்யப்பட்டது. இந்த நிலையில் யாழ்ப்பாணத்திற்கு அப்பால் மூன்று தீவுகளில் கலப்பின மின் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கைகள், இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி. எல் பீரிஸ் ஆகியோர் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இந்தியாவின் மானிய உதவியுடன் இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாளத் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை, கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை, இலங்கையில் மீன்பிடித் துறைமுகங்களை மேம்படுத்துவதற்கான







ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை, காலி மாவட்டத்தில் உள்ள 200 பாடசாலைகளில் தனிப்பயனாக்கப்பட்ட, பாடத்திட்ட மென்பொருளுடன் கூடிய நவீன கணினி ஆய்வகங்கள் மற்றும் ஸ்மார்ட் பலகைகளை நிறுவுவதற்கானப் புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் வெளிநாட்டு சேவை மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம் தொடர்பில், சுஸ்மா ஸ்வராஜ் நிறுவகத்துக்கு இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை என்பன கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இன்றைய இலங்கையின் அவலத்தைப் புலிகளின் தலைவர் 2005இல் வகுத்த வியூகத்தின் வழியே அரங்கேறி வருகிறது. இந்திய வல்லாதிக்கத்தை ஏற்க மறுத்த காரணத்தால், இந்திய அரசு பூமாலை போட்டது, குண்டு மழை பொழிந்து, ஈழத் தமிழ் மக்களையும், தமழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் வேரோடு படுகொலை செய்து அழித்தது. ஆயுதம் எடுத்துப் போரிடாத பிரபாகரனின் மனைவியையும், எட்டு வயதே நிரம்பிய மகன் பாலச்சந்திரனையும் படுகொலை செய்து, தனது வன்மத்தை இந்தியாவின் படைகளும், ராஜதந்திரிகளும் உலகத்திற்கு வெளிப்படுத்திய கோழைத் தனம், வரலாற்றில் பதிவுகளாக இடம் பெற்றுள்ளதை நாம் கண்டோம். அந்த வகையில் இந்தியா ஈழத் தமிழர்களுக்குச் சிங்களம் செய்த அநியாயங்களை விடப் பல்லாயிரம் மடங்குகள் அதிகம் எனலாம்.

அதனால் இந்தியாவில் பல வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்து, அதன் மூலம் புலிகளை அழிக்க வழி தேடித் திரும்பிய அன்றைய இலங்கைப் பிரதமர் ரணில்






விக்கிரமசிங்க மீண்டும் ஆட்சியில் அமர்ந்தால், தமிழர்கள் அழிக்கப்படுவது உறுதி எனத் தெரிந்து கொண்ட தலைவர் பிரபாகரன், தமிழ் மக்களை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காமல் பகிஷ்கரிக்க வைத்தார். அதன் மூலம் மகிந்த ராஜபக்ஷ தெரிவாகவும், அவரது முட்டாள் தனங்களே சிங்களத்தை அழிக்கும் எனக் கருதி, மறைமுகமாக மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியை சாத்தியமாக்கினார். அவரது அந்தப் பகிஷ்கரிப்பை கேலியும், கிண்டலும் செய்த எதிரிகளும், புத்தி சாலிகளும் இன்று இலங்கையில் இடம் பெறும் காட்சிகளால் வாயடைத்து நிற்கின்றனர்.

அதற்காகப் புலிகள் பல மில்லியன் டாலர்களைச் சிங்கப்பூரில் மகிந்த தரப்பிடம் இலஞ்சமாகப் பெற்றார்கள் என செய்திகளும் வெளியாயின. அச்செய்தி உண்மையாக இருப்பினும் கூட, ராஜபக்ஷ குடும்பமே சொந்தக் காசில தனக்குத் தானே சூனியம் வைத்தது போல இன்று ரணிலும், மகிந்தரும் ஓடவும், ஒளியவும் முடியாமல் கோமாளிகளாகக் காணப்படுகிறார்கள்.

பட்ட கடனை அடைக்க முடியாமல் சிங்களம் இன்று உலக நாடுகளிடம் பிச்சை கேட்டலைகிறது. மத்திய வங்கியின் பண முறிகளின் கொடுப்பனவுக் காலம் கழுத்தை நெரிக்கிறது. அதைச் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகி, மலேசியாவில் இருப்பதாகச் சொல்லப்படும் ரணிலின் மருமகன் மகேந்திரன் பணத்தைத் திரும்பத் தரப்போவதில்லை.

அதை மீட்கும் முயற்சியில் ஈடுபட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா, அன்றைய நல்லாட்சிப் பிரதமரான ரணிலின் நெருக்கடிகளால் அந்தப் பணத்தையும், அது போன்ற ஊழல் பணங்களையும் மீட்க முடியாமல், அவரும் ஊழல் செய்து தப்பிப் போய் விட்டார். மகிந்த ராஜபக்ஷ கோட்டபாயா, பசில், சாமல் என எல்லா ராஜபக்ஷர்களும் நடத்திய ஆட்சியில், கும்பல் அடித்த கொள்ளைகள் கையளவு என்றால், அவர்களது அதிகாரிகளும், குடும்ப மற்றும் அரசியல் அல்லக்கைகள் அள்ளிப் போன நாட்டின் செல்வங்களை எல்லாம் இமாலய அளவு எனலாம்.

வெய்யில், மழை, குளிர் எனப் பாராமல் உழைக்கும் மழையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா தினக் கூலி கோரிக்கைக் கடந்த பல வருடங்களாகப் போராடியும் எந்த மலையக அரசியல்வாதியாலும் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. ஆனாலும், அவர்களில் சிலர் மந்திரிகளாவும், மலையக மக்களின் ஒட்டுப் பொறுக்கிகளாக உள்ளனர். அப்படியான ஒரு பாழ்ப்பாணத் தமிழ் அமைச்சர்தான் ஈ.பி.டி.பி. என்கிற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்கிற பெயரில், தமிழரின் விடுதலைப் போராட்டத்தை 1987 தொடக்கம், காட்டிக் கொடுத்து அழித்ததோடு, ஒரு தமிழ் அமைச்சராகத் தமிழ் மக்களுக்குத் துளியளவும் பயனற்றும், அரசின் மக்களுக்கான பண ஒதுக்கீடுகளைச் சுருட்டுவதே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டுள்ளார்.

இப்படி அரசில் உள்ளவர்கள் எல்லாம் மக்கள் பணத்தை வாரிச் சுருட்டியதோடு அல்லாமல், நாட்டின் இயற்கை வளங்கள் அபிவிருத்தி என்றும், அடமானம் என்றும் உலக நாடுகளிடம் கடன் மேல் கடனாகப் பெற்று, இன்று மக்களின் அன்றாட வாழ்க்கை வாழ முடியாத படிக்குச்

செய்ததில் மகிந்த ராஜபக்ஷ குடும்பம் மட்டும் அல்ல, 1956 தொடக்கம் ஆட்சி நடத்திய எல்லாத் தலைவர்களுமே ஏற்றிய சுமையைத்தான் இன்று மகிந்த சகோதரர்கள் சுமக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவர்களின் இன, மதவெறி நாட்டை முழுமையாக அழிவுக்கு இட்டுச் செல்ல, தமிழ் இன அழிப்புப் போரை ஏற்படுத்தி, நடத்தி முடித்த 30க்கும் மேற்பட்ட உலக நாடுகள், இலங்கையை மீளாக் கடனாளியாக்கி, மக்களே புகழ்ந்து போற்றிய சிங்களத் தலைவர்களை, நாட்டை விட்டே விரட்டப் போராடி வருகிறார்கள். பல வழிகளிலும் கடன் கொடுத்துக் குட்டிச் சுவராக்கிய சீனா வட்டியும், முதலுமாக அதைவிட அரசின் படைத்தள நிலங்களை வாங்கியும் போதாமல், காசாக வாங்க நெருக்கடிகளை ஏற்படுத்துவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மக்களின் போராட்டத்தின் பின்புலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளின் கைவரிசைகள் நிச்சயம் உண்டு. அவர்கள் இப்பொழுது போலி அனுதாபம் காட்டி, இலங்கை நாட்டை முழுவதுமாகக் கபளிகரம் செய்யும் முயற்சிகளில் கடன் உதவி, பொருள் உதவி எனப் போட்டிப் போட்டு சிங்கள ஆட்சியாளரைத் தம் வசப்படுத்தும் பணிகளில் தீவிரமாக உள்ளனர்.

பொழும்புத் துறைமுகத்தில் சரக்குப் பெட்டக முனை உட்பட, திரிகோணமலை கடற்படைத் தளம், கச்ச தீவு உட்பட வடக்கின் பல தீவுகள் மட்டும் அல்ல, அம்பாந்தோட்டைத் துறைமுகம் உட்பட பல கேந்திர முக்கியம் நிறைந்த இடங்களும், இயற்கை வளங்களும் குத்தகை உரிமம் என்றும் இந்தியாவிடம் கைமாற உள்ளதாக செய்திகள் கூறுகின்றன. இவற்றைப் பார்க்கும் பொழுது இந்தியாவின் உண்மை முகம் தெரிவதோடு, இலங்கையில் மக்களின் புரட்சியின் பின்னணியும் அம்பலமாகின்றன.





"எமது உரிமைப் போராட்டத்தின் பிரதான முட்டுக் கட்டைகளாக அமையப் போவது சிங்களப் பேரினவாதிகளோ, சிறிலங்கா இராணுவமோ அல்ல. தத்தமது கேந்திர மற்றும் பொருளாதாரக் குறிக்கோள்களை அடைவதற்கு அமெரிக்கா, இந்தியா, சீனா, ஐரோப்பிய யூனியன் என்பன இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வகுத்துக் கொண்டிருக்கிற வியூகங்களை அரசியல் ரீதியாகவும், போரியல் ரீதியாகவும் எதிர் கொண்டு எப்படி நாம் வரலாறு படைக்கப் போகின்றோம்?"


**- தராகி சிவராம்**

# எப்படி நாம் வரலாறு படைக்கப் போகின்றோம்?

உலக அமைப்பான ஐ.நாவும், போரில் தம்மை ஈடுபடுத்திய நாடுகளும் ஒன்றாக உள்ளதால் இவர்களிடம் நீதி கோருவதும், எதிர்பார்ப்பதும் அறிவீனமாகத் தெரிகிறது. இந்த நாடுகள் எல்லாம் தமது சுய இலாப நோக்கங்களுக்காக, உலகில் போர்களை நடத்துகின்றன. போரியல் பொருளாதாரம்தான் உலகின் பொதுப் பொருளாதாரமாக எழுதப்படாத, வெளியில் சொல்ல முடியாத, பேசப்படாத அரசுகளின் சித்தாந்தமாக மாறி விட்டது.

ஈழ இனஅழிப்புப் போரை நடத்திய நாடுகள் நடத்தும் ஐ.நா. சபையும், அதன் அங்கமான மனித உரிமை ஆணையமும் கடந்த 13 வருடமாக வழங்க முன்வராத போர் குற்ற நீதிவிசாரணை, வருகிற செப்டம்பர் மாத அமர்விலும் எமக்குப் பட்டை நாமம் போட உக்கிரெயின் ரஷியப் போர் காரணம் ஆகலாம்.





அன்று ஈழத்தில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் வகித்த பாகத்தை, இன்று ருஷிய மக்களும், அதன் அதிபர் புடினும் வகிக்கின்றனர். அன்றைய அதே தாக்குதல்காரர்களில் ருஷியாவும், உக்கிரெயினும் இருந்தன. இன்று அந்த இரண்டு நாடுகளும் தமக்குள் சண்டையிட, அவற்றோடு சேர்ந்து எம்மை அழித்த அதே நாடுகள் இன்று, போரை நடத்தும் கேவலமான நிலையில் உலக நாடுகளின் அரசியல் தரம் தாழ்ந்து போய் விட்டதைக் காண்கிறோம்.

இதனை 14.12.2003 இலங்கையின் வீரகேசரி ஞாயிறு வார இதழில், கருணா குழுவால் கொழும்பில் படு கொலை செய்து, வீதியில் சடலமாக வீசப்பட்ட, உலகப் புகழ் பெற்ற இராணுவ அரசியல் ஆய்வாளர் தராகி சிவராம் நன்கு தெரிந்து சிறப்புக் கட்டுரையாக தந்திருந்தார். இத்தகைய அவரது உலக அரசியல் திறனாய்வு, அவரை அமெரிக்காவே அழிக்கக் காரணமாக இருக்கலாம் என்கிற முடிவுக்கு 30 வருடங்களின் பின்னர் எம்மை நினைக்க வைக்கின்றது.

எம் இனத்தின் எம தூதர்களாக மாறிய, நாம் நம்பி ஏமாந்த இறை தூதர்கள். போலி முகத்திரையைக் கிழித்துக் காட்டும் ஈழப் பார்வை இணைய தளம். பாருங்கள் படியுங்கள் ***https://www.eelamview.com*** இத்தகைய காட்சிகள் உலகில் பல காலங்களில், பல நாடுகளில் வரலாற்றில் இடம் பெற்றவைதான். இந்தக் கலையில் அமெரிக்கா உலகில் முதல் இடத்தை வகிப்பதில் அதிசயம் கிடையாது.

தனது நாட்டின் அதிபர்களான ஆபிரகாம் இலிங்கன், ஜோன் எப்ஃ கென்னடி போன்றவர்களைக் கொலை செய்த அமெரிக்க உளவுத் துறை, இலங்கையில் புத்த மதத் துறவி சோமபாலா, அமைச்சர் விமலா விஜய வர்த்தனா, ஒசிக் கொரியா என்கிற தாதாவையும் இன்னும் பலரைப் பயன்படுத்தி, தனது திட்டத்தை நிறைவேற்றியது. அதாவது யார் யாரைப் பயன்படுத்தினால், உண்மைக் கொலையாளி அவனின் பின்புலம் வெளியில் தெரியாமல் மறைக்க முடியும், இரகசியம் திட்டத்தில் இருக்கும்.இதே விதமாக இந்தியாவின் பிரதமர்கள் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி கொலைகளும் நடந்தேறின. இவை எத்தனை வருடங்கள் போனாலும் மர்மம் கலையாமல் உண்மைகள் மறைக்கப்படும்.

இலங்கைத் திரிகோணமலைத் துறைமுகத்தைப் பிரிட்டன் முழுமையாக இலங்கை தன்னிடம் ஒப்படைக்க 1956இல் ஆட்சி அதிகாரத்தில் வந்த பண்டார நாயக்கா உருவாக்கினார். அதுவே அன்றைய இலங்கையின் பிரதமர் பண்டார நாயக்காவின் படுகொலையாக முடிந்தது.

அதனால் திரிகோணமலைக் கடற்படைத் தளம் இலங்கையின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அதனை அமெரிக்கா தன் வசப்படுத்த முனைவதைக் காட்டி ருஷியா இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியை எச்சரிக்க, இந்திரா ஈழவிடுதலைப் போரைக் கையில் எடுத்து,


அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11


சர்வதேச இரு துருவ அரசியலில் ஈழத் தமிழரின் விடுதலைப் போரைப் பகடைக் காயாக்கினார். அதனை உண்மை என நம்பிய நாமும், கிழக்கு வங்கதேசம் போல சுதந்திரம் வரும் என நம்பினோம். ஆனால், வங்க விடுதலைதான் இந்திராவின் உயிரைப் பறித்தது என்கிற உண்மை இப்பொழுதுதான் வெளி வருவதைக் காண்கிறோம்.

1979இல் சிங்களத்தை எதிர்க்க எமக்குக் காவல் தெய்வங்களாக வந்த ரஷியாவும், இந்தியாவும் 1987இல் எம் இனத்தின் எம கிங்கர்களாக மாறி, 2009இல் முள்ளி வாய்க்காலில் எம் இனஅழிப்பைச் செய்தன. இன்று எமக்கான நீதியை, நாம் எங்கேயும் பெற்றுவிடக் கூடாது என்கிற நிலைப் பாட்டில் எல்லா உலக நாடுகளும் 2009இல் காட்டிய தீவிரத்தை, 2022லும் காட்டி வருவதை நாம் மறக்கவோ, மறுக்கவோ முடியாது, கூடாதும் எனலாம்.

காட்டிக் கொடுக்கும் எங்களின் அரசியல்வாதிகளால் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக் குழுவாலும், எமக்கான நீதியைப் பெற முடியாமல் வருடங்கள் கழிகின்றன.செப்டெம்பரில் வரும் அடுத்த அமர்விலாலாவது இலங்கை அரசுக்கு எதிரான மனித உரிமை மீறல் தொடர்பான தீர்மானம் நிறைவேறலாம் என்கிற நப்பாசையும், கானல் நீராகப் போய் விட்டது.

வழமை போல இந்தியா இரட்டை நிலை வாக்கெடுப்பில் பங்களிக்காமல், பச்சோந்தியாகி நடுநிலை என்கிற நாடகத்தை ஆடி, தமிழ் மக்களை ஏமாற்றத்தில் ஆழ்த்தி உள்ளது. அதன் ஆதரவு நாடுகளும் வாக்கெடுப்பை பகிஷ்கரித்து, தமிழ் இனப் படுகொலைக்

கான நீதியைப் பெற முடியாமல் செய்து விட்டன.

*1948*இல் இந்தியா-இலங்கை என்கிற இரு நாடுகள் பிரத்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றாலும், என்றுமே முழுமையான சுதந்திர நாடுகளாகத் தம்மை தகவமைத்தது கிடையாது. இரண்டுமே பிரித்தானிய, அமெரிக்க நாடுகளின் அடிமை நாடுகளாகத்தான் இரு நாடுகளின் தலைவர்களும் இயங்கிக் கொண்டு வருகின்றனர்.

இந்தியத் துனணக் கண்ட நாடுகளாக விளங்கிய இந்த இரு நாடுகளும், பிரித்தானியக் கிழக்கு இந்தியக் கம்பனி என ஆண்ட வியாபாரக் கொள்ளையரின் நிறுவனம், இரு நாடுகளின் சிற்றரசர்களையும், இனங்களையும் பிரித்தாளும் தந்திரத்தால் 200 ஆண்டுகளுக்கும் மேலாக வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த முடிந்தது.

இதே தந்திரத்தை இன்று இந்தியா, அமெரிக்கா, இலங்கை உட்பட எல்ல உலக அரசுகளும் கடைப்பிடித்து வருகின்றன. ஐ.நா. மனித உரிமைச் சபையின் அமர்விலும் இதே பிரித்தாளும் தந்திரம்தான் இலங்கை அரசையும், தமிழ் இன அழிப்புப் போரை நடத்திய சிங்கள அரசையும், போர்க் குற்றங்களுக்கான பொறுப்பை கூற வைக்க முடியாமல் காப்பாற்றி வருகிறது.

13 வருடங்களாக தமிழ் மக்களுக்குக் கிட்டாத நீதி, என்றைக்குமே கிடைக்காமல் போய்விடுமோ என்கிற அச்சம் உருவாகி விட்டது. நீதி மறுக்கப்பட்ட மக்கள், விடுதலைப் போராட்டங்களின் வரிசையில் ஈழ விடுதலைப் போர்க் குற்ற நீதி விசாரணைகளும், ஆழப் புதைக்கப்படும் அபாயம் மிகத் தெளிவாகத் தெரிகிறது.

உலக அமைப்பான ஐ.நாவும் போரில் தம்மை ஈடுபடுத்திய நாடுகளும் ஒன்றாக உள்ளதால், இவர்களிடம் நீதி கோருவதும், எதிர்பார்ப்பதும் அறிவீனமாகத் தெரிகிறது. இந்த நாடுகள் எல்லாம் தமது சுய இலாப நோக்கங்களுக்காக உலகில் போர்களை நடத்துகின்றன. போரியல் பொருளாதாரம் தான் உலகின் பொதுப் பொருளாதாரமாக எழுதப்படாத, வெளியில் சொல்ல முடியாத, பேசப்படாத அரசுகளின் சித்தாந்தமாக மாறி விட்டது.

இதனை 14.12.2003இல் இலங்கையின் வீரகேசரி ஞாயிறு வார இதழில் கருணா குழுவால், கொழும்பில் படு கொலை செய்து, வீதியில் சடலமாக வீசப்பட்ட உலகப் புகழ் பெற்ற இராணுவ அரசியல் ஆய்வாளர் தராகி சிவராம் நன்கு தெரிந்து சிறப்புக் கட்டுரையாக தந்திருந்தார். இத்தகைய அவரது உலக அரசியல் திறனாய்வுதான் அவரை அமெரிக்காவே அழிக்கக் காரணமாக இருக்கலாம் என்கிற முடிவுக்கு 30 வருடங்களின் பின்னர் எம்மை நினைக்க வைக்கின்றது.

'சர்வதேச வியூகங்களே தமிழீழம் எதிர்கொள்ள வேண்டிய சவால்' என்கிற தலைப்பில் அன்று அவர் எழுதியக் கட்டுரையின் இறுதியில் அவர் கூறிய மறக்க முடியாத வரிகள் இவை.

'எமது உரிமைப் போராட்டத்தின் பிரதான முட்டுக் கட்டைகளாக அமையப் போவது சிங்களப் பேரினவாதிகளோ, சிறிலங்கா இராணுவமோ அல்ல. தத்தமது கேந்திர மற்றும் பொருளாதாரக் குறிக் கோள்களை அடைவதற்கு அமெரிக்கா , இந்தியா, சீனா, ஐரோப்பிய யூனியன் என்பன இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வகுத்துக் கொண்டிருக்கிற வியூகங்களை அரசியல் ரீதியாகவும், போரியல் ரீதியாகவும் எதிர் கொண்டு எப்படி நாம் வரலாறு படைக்கப் போகின்றோம்? என்பதே எம்முன் இன்றுள்ள சவாலாகும்'.

தராகி சிவராம் ஒரு சர்வதேசத் தரம் நிறைந்த அரசியல் ஆய்வாளர். அவர் பற்றிய சில இருண்ட பக்கங்கள் பற்றி வெளியாகும் செய்திகள் அதிர்ச்சி அளக்கின்றன். அவற்றையும் அகரம் வரும் இதழ்களில் அலசும்.

## 24 மணிநேர தகவல் உதவிச் சேவையுடன்



**300 க்கும் மேற்பட்ட Channels மற்றும் 5,000க்கும் மேற்பட்ட திரைப்படங்கள்**

**இப்போது அனைத்து நாடுகளிலும்**




வாராந்தம் புத்தம்புது திரைப்படங்கள்,
உங்கள் அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
ஆகிய அனைத்தையும் கண்டுகளிக்கலாம்

### REACH OUR DISTRIBUTORS

**OFFICE :**
0044 2037 690498

**UK :**
0044 7882274040
0044 7723229209

**SWISS :**
0041 4455 14321

**GERMANY :**
0049 15146978484
0049 17670334213
0049 62063052893

**FRANCE :**
0033 782775490
0033 977195911

**NETHERLANDS, BELGIUM, LUXEMBOURG :**
0031 621604168

**ITALY :**
0039 3510257812

**DENMARK :**
0045 20829548
0045 20718780



# தமிழீழ விடுதலைப் போருக்கு நிதி திரட்டியது

# குற்றம் அல்ல அது என் உரிமை!

## உயர்ந்து ஒலிக்கும் நாதன் தம்பியின் குரல்

ஐரோப்பிய ஒன்றியமானது, 2006ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடை விதித்த பின்னர், இத்தடையைச் சாதகமாக வைத்து சிங்கள அரசானது, தமிழீழ மக்கள் மீது இன அழிப்புப் போரை நடாத்தியது. இந்தத் தடை யாரால் பின்னப்பட்டது? எங்கிருந்து ஏவப்பட்டது? அதன் விளைவுகள் என்ன? என்பதை அறியாமலேயே யேர்மனியில் இருந்து தமிழீழ விடுதலைக்காக நிதி திரட்டியவர்கள் மீது 2010 ஆம் ஆண்டில் கைது நடவடிக்கை நிகழ்ந்தது.

இந்தக் கைதுகளின் பின்னணியில் நடைபெற்ற வழக்குகளைக் கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாக்க முயற்சித்த ஐரோப்பிய ஒன்றியம், அதற்காக வித்தியாசமான நடைமுறையொன்றைக் கையாண்டது. நிதி திரட்டியவர்களை வைத்தே, விடுதலைப்புலிகள் தீவிரவாத அமைப்பு என வாக்குமூலம் பெறுவதே அந்த வித்தியாசமான நடைமுறையாகும்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது நடாத்தப்பட்ட விசாரணைகளில் எவ்வித நடுநிலைத் தன்மையும் பேணப்படாமல், விடுதலைப் புலிகள் தீவிரவாத அமைப்பு என்றும், அவர்களுக்கு நிதி திரட்டியமை குற்றம் என்ற வகையிலும் நடத்தப்பட்ட வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர்களைத் தண்டப்பணம் அல்லது சிறைத் தண்டனை என்ற இரு வாய்ப்புகளூடாகத் தண்டித்து, அவர்களை உளவியல் சிக்கலுக்குள்ளாக்கி, விடுதலை செய்வதே இந்தக் கைதுப்படலத்தின் முக்கிய குறிக்கோளாகும். இந்தக் கைதுகளின் காரணமாக மிகுந்த அச்சமுற்ற தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களில் பெரும்பாலானோர், நீதிமன்றக் குற்றச்சாட்டிற்கு ஒத்திசைவாகக் கையெழுத்திட்டு, தண்டனையை ஏற்றுக் கொண்டு, வெளிவரும் நிலைக்கு தாமாகவே உந்தித் தள்ளப்பட்டனர்.

இதற்குரிய அடிப்படைக் காரணம் யாதெனில்; இவ்வழக்கு மீது உருவாக்கப்பட்ட "பயப்புரளியே" ஆகும். 2010ஆம் ஆண்டு கைது செய்யப்



பட்டவர்கள் மீதான வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது, இவ்வழக்கை எதிர்த்துப் போராடி, குற்றச்சாட்டை நிராகரித்து வெற்றி பெறுவது எமது நீண்ட கால செயற்பாடுகளுக்கு நல்வினையாக அமையும் என்ற ஆலோசனைகளை, அப்போது இவ்வழக்கை நடத்தியவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் ஓர் கசப்பான உண்மையாகும்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்கள் நிதி திரட்டியமையைக் குற்றமாக ஏற்றுக் கொண்டு தண்டனையையும் பெற்றுக் கொண்டு வெளிவந்த நிலையில், இரண்டாம் கட்ட விசாரணைப் படலம் ஆரம்பமாகியது. அவ்வேளையில்; நிதி திரட்டிய போதும் கைது செய்யப் படாமலிருந்த செயற்பாட்டாளர்களின் இருப்பிடங்களில் யேர்மனிய காவல் துறையின் இரகசியப் பிரிவால் திடீர்ச் சோதனை நடத்தப்பட்டது. சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்களை வைத்து, நிதிதிரட்டிய ஏறக்குறைய 15 செயற்பாட்டாளர்கள் (நாம் அறிந்த எண்ணிக்கை) மீது இரண்டாம் கட்டமாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

நிதி திரட்டியமை குற்றம் எனச் சித்தரிக்கப்பட்டு, குற்றத்தை ஒப்புக் கொள்ளுமாறு இரண்டாம் கட்டமாக வழக்குப் பதிவு செய்யப்பட்டவர்கள் மீது மறைமுகமாக அழுத்தங்கள் பிரயோக்கிப்பட, நிதி திரட்டிய பலர் அதைக் குற்றமாகவே ஏற்றுக் கொண்டு தண்டப்பணத்தைச் செலுத்தும் நிலைக்குள் சென்றுவிட்டனர். விடுதலைப் போராட்டத்தையும், அதன்பால் நாம் செலுத்திய உயிர்க் கொடைகளையும் "பயங்கரவாதமாக" ஏற்றுக்கொள்ளுதல் என்பது, எதிர்காலத்தில் எவ்வகையான எதிர்விளைவுகளை உண்டாகும் என்பதைச் சிந்திக்க மறுத்தோ, அன்றி குடும்ப வாழ்க்கை சிதைவுற்று விடும் என்ற ஆழ்மனப் பயத்தினாலோ பல செற்பாட்டாளர்கள் நிதி திரட்டியமையைக் குற்றம் என ஏற்றுக் கொண்டு விட்ட வேதனையான நிகழ்வு நடந்தேறியது.

ஆனால்; இதேவகையில் வழக்கை எதிர்கொண்ட நாதன் தம்பி என்ற செயற்பாட்டாளர் மட்டும், தனது ஆழ்மனச் சிந்தனையினூடாகவும், எதிர்கால விளைவுகளைச் சிந்தித்ததனூடாகவும் தனது






வழக்கை ஓர் போராட்டமாக மாற்றியமைத்தார். "தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்துவதற்காகவே நான் நிதி திரட்டினேன்.." என்ற வாதத்தை அடிப்படையாக வைத்து, "என்மீது சுமத்தப்பட்ட குற்றத்தை நான் குற்றமாக நோக்கவில்லை, அது எனது உரிமையின் மீது சுமத்தப்படும் அடக்குமுறையாகப் பார்க்கிறேன்" என்ற எதிர்வாதத்தினூடாக யேர்மனிய நீதிமன்றில் எதிர்வழக்குத் தொடுத்த நிலையில், வழக்கின் மீதான விசாரணை கடந்த 27.04.2022 அன்று ஆரம்பமாகியது.

பிரபாகரன் யார்?, விடுதலைப் புலிகள் யார்?, கரும்புலிகள் யார்?, தமிழீழத் தேசத்தின் கட்டுமானங்கள் யாரால் உருவாக்கப்பட்டன? என்ற கேள்விகளை எழுப்பியிருக்கும் இவ்வழக்கின் மூன்று அமர்வுகள் நடந்தேறி விட்டன. இக்கேள்விகளை நீதிமன்றில் நீதிபதிகளே எழுப்பி, ஆராயுமளவிற்கு நாதன் தம்பியின் போராட்டம் ஓர் புதுவழியைத் திறந்திருக்கிறது. போர்த்துக்கேய, ஒல்லாந்த, பிரித்தானிய ஆட்சிகள் தொடங்கி, இன்றைய சிங்கள வன்முறையரசு நிகழ்த்திய இனப் படுகொலைகள் வரைக்கும் தமிழினம் நீண்டதொரு அழிவைக் காலம் காலமாக எதிர்கொண்டு நிற்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்திய எதிர்ச் சமர்கள், இனப் படுகொலையிலிருந்து தமிழினத்தைக் காப்பாற்றுவதற்காகவே நடாத்தப் பட்டவை என நாம் உரத்துச் சொல்லாமல், எவ்வித மாற்றங்களும் நிகழப் போவதில்லை. அதைச் சொல்லவேண்டிய இடத்தில் நாதன் தம்பி உரத்துச் சொல்கிறார் என்ற அடிப்படையில், உலகத் தமிழினம் அவருக்குத் தமது ஆதரவை நல்க வேண்டும். நாதன் தம்பி அவர்களோடு இணைந்து, தமிழீழ விடுதலைச் செயற்பாட்டாளர் ஆனந்தராசா அவர்களும், 'தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு நிதி திரட்டியது குற்றமல்ல, அது எனது உரிமை' என்ற வாதத்தை முன்வைத்து நீதிமன்றில் எதிர்வழக்குத் தொடுத்திருக்கிறார்.

எம் அனைவரையும் போலவே நாதன் தம்பி அவர்களுக்கும், ஆனந்தராசா அவர்களுக்கும் அழகிய குடும்பங்கள் உள்ளன. தமது குடும்பம் மீதான எதிர்கால வாழ்விற்காக உழைக்க வேண்டிய தேவையும் இருக்கிறது. ஆனால்; எமது இனத்தின் எதிர்கால வாழ்விற்காக நாம் உழைக்க மறந்தால், இந்த இனம் அடிபட்டுச் சிதைந்து போகும் என்ற பயம் அவர்களை ஆட்கொண்டதன் விளைவே இன்று அவர்கள் எமது உரிமையை நிலைநாட்டப் போராடும் நிலைக்கு உந்தித் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

நாதன் தம்பி தனது வாக்குமூலத்தில் பதிவுசெய்த விடயமொன்றை இங்கே தருகிறேன்.

"நான் விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டினேன் என ஒப்புக்கொள்கிறேன், ஆனால் இதை ஒரு குற்றமாக ஏற்றுக் கொள்ளவில்லை. நான் செய்தது குற்றமென என்னால் ஏற்றுக் கொள்ளவியலாது என்பதில் நான் திடமாக உள்ளேன். ஏனென்றால், நான் எனது வாழ்க்கையின் இலட்சிய உழைப்பை மறுத்ததாக அது இருக்கும். இந்தக் குற்றச்சாட்டை எதிர்த்து வாதிடுவதே, எனது மக்களான ஈழத்தமிழரின் உரிமைகளுக்கும், கண்ணியத்திற்கும் முக்கியமானது என நான் நம்புகிறேன். சிறிலங்கா அரசால் பாதுகாப்பு வலையத்திற்குள் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்ட பின்னர் கடல், வான், தரை ஆகிய மூன்று பகுதிகளிலிருந்தும் தாக்கி, ஈழத்தமிழர் படுகொலை செய்யப்படுவதற்கு மௌனமாக அனுமதி வழங்கிய சர்வதேச சக்திகளுக்கும், என்மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்த வழக்கிற்கும் ஆழமான தொடர்பு இருக்கிறது.

2006 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தால் தவிபு மீது சுமத்தப்பட்ட குற்றங்கள், சமாதானத்தைச் சிதைத்து, ஈழத் தமிழருக்கெதிரான இனஅழிப்புப் போரை சிறிலங்கா ஆரம்பிப்பதற்கும், தொடர்ச்சியாக படுகொலைகளை நடாத்துவதற்கும் ஏதுவான சாதகமான பச்சை விளக்கை ஒளிரச் செய்தன. தமிழர்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட பாரிய போர் வன்முறைகளை சிறிலங்கா அரசு நியாயப்படுத்துவதற்கும் தவிபு மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் உதவின. இந்தக் குற்றம் சுமத்தல், சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்ட ஒரு தரப்பிற்கு எதிராக அமைந்ததானது, ஈழத்தமிழரின் அடிப்படை உரிமைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியதனூடாக ஏற்பட்ட ஒடுக்குமுறையை எதிர்ப்பதற்கான மறுப்பையும் அதன் உரிமைகளையும் யேர்மனிய அரசானது பாதுகாத்திருக்க வேண்டுமென நான் நினைக்கிறேன்.....

இவ்வாறு குற்றம் சுமத்துதல் மீது கேள்வியெழுப்புதல் ஈழத்தமிழர்களுக்கு மட்டும் உரியதானதல்ல. ஒடுக்கப்பட்ட நிலையில் உலகம் முழுவதும் இனத்துவேசம் கொண்டவர்களுக்கெதிராகப் போராடும் அனைவருக்குமான உரிமையாகும். யேர்மனிக்கும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ஒரு சமாதானத்தை ஆதரிப்பதற்கான கடப்பாடுகள் உள்ளதா? அல்லது இந்தக் கொள்கைகள் பிற அதிகாரங்களுடனான அதன் உறவுகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டுமா? இவ்வாறான காரணங்களுக்காகவும், ஏனைய விடயங்களுக்காகவும் இவ்வாறான குற்றம் சுமத்துதல் மிகவும் ஆழமான தவறாகும் என்பதுடன், இதற்கெதிராக நான் எழவேண்டியது கட்டாயமாகிறது.."

வழக்கில் வெற்றி, தோல்வி என்பதற்கு அப்பால்; நாம் இந்த நீதிமன்றில் எமது வரலாறையும், எமது உரிமைப் போரின் நியாயத்தையும், எமது இனத்திற்கு நிகழ்ந்த இனப்படுகொலையையும் நாதன் தம்பி எடுத்துச் சொல்வதோடு, நிதி திரட்டியது குற்றம் என்பதை மறுக்கிறார். வரலாறு என்பது உண்மையைப் பதிவு செய்யப் போராடுவதுதான். ஆதலால் நாதன் தம்பி மற்றும் ஆனந்தராசா ஆகியோரது போராட்டத்திற்குத் துணை நிற்க வேண்டியது உலகத்தமிழர்களின் தலையாய கடமையாகும்.




# ஈழத் தமிழரை முடக்க மீண்டும் முயற்சிக்கும் இந்தியா





சிங்களத்தை மிக வெற்றிகரமாகக் கையாண்டு விட்டதாக மோடியின் அரசு நம்பிச் சிங்களத்துக்கு கடன்களையும், ஆபத்துக்கால இலவசங்களையும் அள்ளிக் கொடுத்து, தனது பக்கத்துக்கு இழுத்து விட்டதாக நம்பிக்கை கொண்டதாகத் தெரிகிறது. சுட்டுப் போட்டாலும் சிங்களத்தின சுபாவம் மாறிவிடாது என்பதை, காலம் இந்தியாவுக்கு உணர்த்தும் வேளை ஒன்று கட்டாயம் வரும்.

இலங்கையில் சிங்கள ஆட்சியாளர் பல தடவைகள் இந்தியாவின் நம்பகத் தன்மையை நன்கறிந்து வைத்துள்ளனர். இதே மகிந்தரை 2015 பதவி இறக்கி, மைத்திரிபால சிறிசேனாவை அதிபராகவும், ரணிலைப் பிரதமராகவும், சம்பந்தனை எதிர்க் கட்சித் தலைவராகவும் கொண்ட நல்லாட்சி அரசை நிறுவி, இலங்கையைத் தனது கட்டுக்குள் கொண்டு வர முயன்றது. அதன் கையாலாகத் தனமும், ஊழல் நிறைந்த ஆட்சியும் மீண்டும் மகிந்த சகோதரர்களைப் பதவியைப் பெற வழி செய்தது.

இப்படி இந்தியாவால் பதவி இழந்தவர்களின் பட்டியல் மிக நீளமானது. அதனால் இந்தியாவால் சிங்கள ஆட்சியாளரை என்றுமே கட்டுப்படுத்த முடியாது. 1980 தொடக்கம், இன்று வரை இந்தியாவின் செயற்பாடுகளை ஏற்கும் ஒரு அரசை என்றைக்குமே ஆரிய, சிங்கள இன பௌத்த மத வெறிப் பெரும்பான்மை அனுமதிக்கும் என்பது, பகற் கனவே!. இன்றைய அரசுக்கு எதிரான மக்கள் புரட்சிக்கும், இந்திய உளவுப் படையே காரணம் என்கிற பேச்சுகளும் மக்களிடையே பரவி வருகிறது.

எனவே, இந்தியாவின் கவனம் தமிழ் மக்களைப் பலியிடுவதிலே ஆர்வமாக உள்ளது. 2009இல் பக்க பலமாகக் காட்டிக் கொடுத்து, தமிழ் இன அழிப்புக்குத் துணைபோன எல்லா எட்டப்பர்களும், கடந்த சில மாதங்களாக மீண்டும் இந்தியா புகழ் பாடவும், 15ஆவது திருத்த மசோதாவின் கீழ் அரசியல் தீர்வு என்கிற பல்லவியைப் பாடி வருகிறார்கள்.

இதனை சுமந்திரன், சாணக்கியன், சோடி தில்லானா ஆட்டம் ஆடி

அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து நாடுகளில் காலொடிந்து ஆட்டத்தை நிறுத்திய நிலையில், இந்தியா தனது வித்துவான்களை அனுப்பி, மலையகத் தமிழர் தலைமைகளையும், ரெலோ புலொட் ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற பழைய கைத்தடிகளையும், இந்தியா வழங்கும் தீர்வைப் பெற வைக்க முயற்சிகளை மேற்கொள்ள பா.ஜ.க. தமிழ் மாநிலத் தலைவர் அண்ணாமலை தலைமையில் மூளைச் சலவை செய்யும் அணி மலையகத்தில் மே தின நிகழ்ச்சி நடத்தி, வடக்கில் நல்லை ஆறுமுக நாவலர் ஆதீனத் தலைவரின் ஆசி வேண்டித் தரிசனமும் செய்துள்ளது. இது போன்ற வலுவான இந்திய அரசியல் படையணி, அசோக மன்னன் காலத்தில் புத்த மத பிரச்சாரம் செய்த மகிந்த சங்கமித்தையின் பின்னர் பா.ஜ.க. அண்ணாமலையின் இந்தப் புனிதப் பயணத்தைக் குறிப்பிட முடியும்.

அண்ணாமலை மறக்காமல் முன்னாள் வடமாகாண முதலமைச்சரும், இந்நாள் யாழ் மாவட்ட பா.உ. திரு.க.வி.விக்கினேஸ்வரன் அவர்களையும் சந்தித்து உரையாடி உள்ளார். விக்கினேஸ்வரன் ஐயா அவர்கள் 15ஆவது திருத்தச் சட்டத்தை எப்போதோ, எதற்கும் உதவாது எனத் தூக்கி எறிந்து விட்டார். சர்வதேச நீதி விசாரணை சர்வதேச சட்ட விதிகளின் கீழ், தமிழ் மக்களுக்காக நிரந்தரமான அரசியல் தீர்வு பற்றி உரக்கப் பேசி வரும் நிலையில், அண்ணாமலையின் பருப்பு அவரிடம் விலை போகாது என எவரும் அறிவர். இருந்த போதிலும் விக்கிரமாதித்தன் போன்று தனது முயற்சியைக் கைவிடாமல் சந்தித்த அண்ணாமலையின் விடா முயற்சியைப் பாராட்டத்தான் வேண்டும்.

ஏறக்குறைய இதே பணியில் தம்மை ஈடுபடுத்தி, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் அக்கரையும், அனுதாபமும் காட்டி உலகப் பிரபலமாகிய அருட் தந்தை ஜகத் கஸ்பர் போரின் இறுதிக் கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளைக் கைவிட்டார் அல்லது காட்டிக் கொடுத்தார் என்கிற செய்தி உண்மையா? பொய்யா? என்கிற கேள்விக்கான பதிலை ஆராயாமல், அவரை அப்பாவியாக நினைத்தாலும் அவரது தி.மு.க. ஆதரவும், திராவிடத்தைத் தூக்கி




நிறுத்த அவர் தமிழ் தேசியத்தை அழிப்பதில் காட்டி வரும் தீவிரம், அவரது அரசியல் புனிதத்தையும், தமிழர் தொடர்பான பார்வைகள் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

திராவிடம் தமிழ் தேசியத்தை இல்லாதொழிக்கும் வன்மம் கொண்டது. அதன் தோற்றமே ஈ.வெ.ரா. விளக்ககத்தின் படி தமிழ்நாட்டில், தமிழர் அல்லாதவர் அரசியல் செய்ய வைக்கப்பட்ட பெயர். முதலில் தமிழர் கழகம் என முடிவு செய்யப் பட்ட பெயரை, பின்னர் அண்ணாத்துரை மூலமாகவே திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக செய்திகள் உள்ளன.

அமெரிக்காவில் உள்ள தமிழர் கழகம், தெலுங்கர்களின் ஆதிக்கத்தில் இயங்குகிறது எனவும், அது தமிழகத்தில் தி.மு.க. வெற்றி பெறச் செயற்படுகிறது என்னும் செய்தியால், தமிழருக்கு எதிராகத் தெலுங்கர்கள் செயற்படும் உண்மை திரு.வை.கோ. என்கிற தெலுங்கர், தமது தமிழ் பேச்சால் உலகத் தமிழர்களையே 2009 மே மாதம் வரை ஏமாற்றி வந்துள்ளார் என்பது, தமிழர் நாம் எந்த அளவுக்கு ஏமாளிகள் என்பதைக் காட்டுகிறது.

இந்திய மக்கள் சபையில் தி.மு.க. உறுப்பினர்கள் சோனியா காந்திக்கு, விடுதலைப் புலிகளால் ஆபத்து. அதனால் அதி உச்ச 'சற்' தரப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என, சில மாதங்களுக்கு முன்னர் பேசிய வரலாறும் கண்டோம். தமிழக முதல்வர் பதவிப் பிரமாணம் செய்யும் பொழுது, தன்தனத் திராவிட மகன் எனப் பேசி, தமிழினத்தை அந்நியப்படுத்தியப் பிறகும் தமிழர்கள் திராவிடம் என அழைப்பது சிறப்பா? இழிவா?

அந்த வகையில் கஸ்பர் அடிகள் தம்மைத் தமிழர் எனச் சொல்லிக் கொள்ளவோ, தமிழர் நலன் பற்றிப் பேசவோ உலகத் தமிழ் வணிகர் அமைப்பை அமைக்கவும், அந்த அமைப்பை வழிப்படுத்தும் தகமையும் துளியும் இல்லாதவராக பார்க்கப்பட வேண்டும். புலம் பெயர் ஈழத் தமிழ் மக்கள் இலங்கை, இந்திய அரசுகளின் பிடிகளில் சிக்கிவிடாமல் சர்வ தேச அரசியல் அரங்கில், நட்பு சக்திகளை அடையாளம் கண்டு, இணைந்து செற்படுவது தவிர்க்க முடியாத காலக் கட்டாயமாக உள்ளது.






தமிழர் அரங்கம்
INNENSTADT WEST
Kulturbüro
Stadt Dortmund
Kulturbetriebe
DORTMUND
தமிழர் தெருவிழா
2022
Dortmunder U
Park der Partnerstätte
Bundesstraße 54
Bundesstraße 54
westentor
Rheinische Str.
Straßenfest der Tamilen
02.09.2022
Fr. 16:00 - 00:00
03.09.2022
Sa. 11:00 - 00:00
04.09.2022
So. 12:00 - 19:00
3 நாட்கள்
வெள்ளி - சனி - ஞாயிறு
VMDO
Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e.V.
samo.fa
Integrationsagentur der Stadtteil-Schule Dortmund e.V.
தமிழர் கலையகம்
TKD
Tamilische Kulturverein Dortmund
SIVANDIGITAL
SOUND&MORE
ortel MOBILE
ஊடகஅனுசரணை
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ்
TAMIL TIMES
STS
IBC தமிழ்
Lankasri
ETR
0151633 633 33 | 0157 370 50 110 | 0179 26 30 317 | 0151 279 909 90



# உளவு நிறுவனங்கள்

இந்தியா தனது உளவு நிறுவனத்தைக் கொண்டு, ஒரு மக்கள் புரட்சியையே இலங்கையில் நடத்தி வருகின்றது என்பதை உலக அரசியலில் ஏற்படும் பல்வேறு திருப்பங்களை உற்றுக் கவனிப்போர் எந்த நாடு, எந்த நாட்டில் தலையிடுகிறது? ஏன் தலையிடுகிறது? அதற்குரிய காலத்தை, அதற்குரிய சூழலை கவனத்தில் எடுத்து எடை போட்டு, தமது ஊடுருவலை நடத்துகின்றது என்பதை அறுதியிட்டுச் சொல்வார்கள்.

இந்தியா இலங்கையைக் கையாள்வதற்கு இலங்கையில் தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் சிறுபான்மையினமாக இருந்தமை முதன்மைச் சுலபமான காரணமாக அமைந்தமையேயாகும். இந்தியா இரு இனங்களையும் கையாள்வதற்கு தொட்டிலையும் ஆட்டி, பிள்ளையையும் கிள்ளிவிடுதல் என்பதை உதாரணப் படுத்தலாம். இலங்கையை ஆக்கிரமிக்க நினைத்த சீனாவினை இலங்கைக்குள் காலூன்றக் கூடாதென்பதில், இந்தியா தனது இராஜதந்திர நகர்வுகளை ஆரம்பிக்கத் தொடங்கியது என்றுதான் பலரும் நம்புவார்கள்.

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடங்கி, பல்வேறு அபிவிருத்திகளுக்கு சீனாவிடம் எதிர்பார்த்திருந்த இலங்கை, இறுதியில் சீனாவின் சின்னஞ்சிறு தீவு போன்ற போர்ட் நகரத்தை உருவாக்குவதற்கு வழிவிட்டது.

வழிவிட்டது என்று சொல்வதற்குப் பதிலாக, சீனாவின் இழுத்த இழுப்புக்கெல்லாம் இலங்கை, பழுதடைந்த படகை கட்டியிழுத்துக் கொண்டு போகும் அதிகளவு வலுவுள்ள படகுக்குப் பின்னால் இழுபட்டுப் போவது போல, சீனாவின் பின்னால் இலங்கை இழுத்த இழுப்புக்கெல்லாம் போய்க் கொண்டிருந்தது.

இலங்கை பொருளாதார ரீதியாக நலிவுற்று, அபிவிருத்திக்கு நிதி தேவைப்பட்ட போதெல்லாம் சீனாவிடம் உதவியைப் பெற வைக்கின்ற இராசதந்திர நகர்வாக இலங்கை, சீனாவின் பக்கம் சாய்வதையும், அந்தச் சந்தர்ப்பத்தில்கூட இலங்கைக்கு எந்த உதவிக்கான சமிக்ஞையைக்கூட காட்டக் கூடாதென்பதில் கவனமாக இந்தியா இருந்தது.

பொதுமக்களின் பொதுப் பார்வைக்கு சீனா, இலங்கையை ஆக்கிரமிப்பதை இந்தியா கவனிக்காமல் இருக்கின்றதே என நம்ப வைத்த இந்தியா, தனது உளவு நிறுவனம் மூலம் இலங்கைக்குச் சீனா உதவி செய்கின்ற அனைத்து அலகுகளையும் நேரத்திற்கு நேரமும், நாளுக்கு நாள் கவனித்துக் கொண்டேயிருந்தது.

இந்தியாவில் தமிழகம் இருப்பதே இந்தியா, இலங்கையைக் கையாள்வதற்கு இலகு ஏதுவாகியது. அங்குள்ள தமிழர்களையும், அரசியல்வாதிகளையும் இலங்கைத் தமிழர்கள், தமிழகத் தமிழர்களின் தொப்புள்கொடி உறவுகள் என்பது போன்ற உணர்வுப் பூர்வமானதாக காட்டிக் கொள்வதற்காக, உணர்ச்சிப் பூர்வமாகப் பேசுவதை ஊக்கப்படுத்தியமை போன்று இலங்கைத் தமிழர்களும் தமது பிரச்சினையைத் தீர்த்து வைக்க இந்திய மத்திய அரசும், தமிழகமும் உதவும் என்று நம்ப வைப்பதில் இந்தியா வெற்றி கண்டது.

இனச்சார்பு நிலையின் வெளிப்பாடாக அவ்வப்போது இலங்கைத் தமிழர்களாலும், தமிழகத் தமிழர்களாலும் வெளிப்படுத்தப் படும் உணர்ச்சிகரமான பேச்சுக்கள், நடவடிக்கைகளை ஒரே கோட்டில் கொண்டு வந்த இந்தியா, இலங்கைக்கு எதிரான சூழ்ச்சியைத் தெளிவாகவே தனது உளவு நிறுவனம் மூலம் வகுத்தது.

உலகநாடுகளில் எங்கெங்கு இந்தியத் தூதரகங்கள் இருக்கின்றவோ, அங்கெல்லாம் இந்திய உளவு நிறுவனமான றோவும், தூதரகத்தின் ஒரு பகுதியாக இயங்கிக் கொண்டிருப்பதும், அந்தந்த நாடுகள் இந்தியா சார்ந்த கொள்கைகளில் என்ன நிலைப்பாட்டு அரசியலை முன்னெடுக்கிறார்கள் என்பதைக் கவனிப்பதை பெரும் வேலையாகக் கொண்டிருக்கின்றது.

முன்னரைவிட இந்தியாவின் உளவுச் செயல்பாடுகள் அதிகரித்திருப்பதற்கு இலகுவாவதற்கும், இந்தியர்கள் பெருமளவில் எல்லா நாடுகளில் தொழில் நிமித்தமாகவும், அதுவும் உயர்பதவிகளில் அவர்கள் இருப்பதும், அதில் கணிசமான தொகையினர் இந்தியாவின் ஒற்றர்களாகவும் வேலை செய்தும் வருகின்றனர்.

அதுபோன்று இலங்கையைக் கையாள்வதற்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களுக்குள் இந்திய உளவு நிறுவனம் தனது ஒற்றர்கள் மூலமாக புலம்பெயர் தமிழர்களை அதீத தமிழீழப் பற்று மிகுந்த தீவிரப் போக்குடையவர்களாக மாற்றி, தனிநாடு சாத்தியமானது என நம்ப வைத்து, நிதி



உதவிகளை வாரி வழங்க வைத்து, அதன் மூலம் இந்தியா தமிழீழத்தை உருவாக்க உதவி செய்யும், அதற்கான இரகசியத் திட்டத்தை இந்தியா வைத்திருக்கின்றது.

அதற்கான இரகசியத் தகவல்களுடன் புலம்பெயர் தமிழர்களைத் தமிழகத்தில் இருந்து சந்திக்க வந்திருக்கிறார்கள் என்பதை, மக்கள் மத்தியில் கசிய விட்டதுடன், அவற்றை காதுவழிச் செய்தியாகவும், தொலைபேசி வழியாகவும் "பொறுத்த ஆட்கள் வந்திருக்கிறார்கள், அலுவல் நடந்து கொண்டிருக்கிறது, கேள்விப்பட்டன் உண்மையா" என வியப்புடன் பலரால் பேச வைக்கப்பட்டது.

இந்திய உளவு நிறுவனத்திற்காக ஒற்றர்களாக வேலை பார்க்கும் ஊடகவியலாளர்களான, பத்திரிகையாளர்களான, பேச்சாளர்களான தமிழகத் தமிழர்களையும், ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் அனுப்பி வைத்ததுடன், புலம்பெயர் தமிழர்களின் தமிழீழச் செயற்பாட்டாளர்களின் திட்டங்களைக் கண்டறிந்து, அவற்றை இலங்கையரசிற்கு சொல்லியும் வந்தனர்.

ஒரு புறத்தில் தமிழீழம் சாத்தியமான ஒன்று என தமிழர்களின் மனங்களில் பதிய வைத்த அதேவேளை, தனிநாட்டுத் திட்டத்திற்கு நாங்கள் ஒரு போதும் ஆதரவளிக்க மாட்டோம் என்பதை தமிழர்கள் மத்தியிலும், இலங்கை அரசிற்கும் சிங்களவர்களுக்கும் தெரியப்படுத்தி வந்தது.

இலங்கையை எந்த இடத்தில் கொண்டு போய் நிறுத்த வேண்டும், அதைத் தொட வேண்டிய எல்லை ஆண்டுகள் எதுவெனத் திட்டமிடுதல் என்பதற்கமைய, தமிழகத் தமிழர்களை வைத்துக் கொண்டு, இந்தியா ஒருபுறத்தில் தமிழர்களுக்கு சாதகமான நாடு தானோ என இலங்கையைத் தடுமாற வைத்தல் மூலம் இலங்கை, தனக்கு ஆதரவுக்கரம் நீட்டும் நாடாக சீனாவின் பக்கம் சாய்ந்தது. சீனாவின் பக்கம் இலங்கை சாய்வதையும், சீனாவிடமிருந்து மீளமுடியாதளவிற்கு கடன் வாங்கி, கடன் கடலில் மூழ்க வேண்டுமென்பதே இந்தியாவின் பெருந்திட்டமாகும்.

அந்நியச் செலவாணிக்கான நிரந்தரமற்ற வருவாயான சுற்றலாத் துறையை நம்பியிருந்ததே இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியாகும். சுற்றுலாத்துறை என்பது ஒரு உதிரி வருவாயைக் கொடுக்கும் துறை மட்டுயோகும்.

கொரோனாப் பரவல் இத்துறையை வீழ்ச்சியடையச் செய்ய, இலங்கைத் திறைசேரி நிலைமை படுமோசமாக, அத்தியாவசியப் பொருட்களையே இறக்குமதி செய்ய முடியாத நிலையிலும், அரசாட்சியின் தவறான பொருளாதார நிதி சார்ந்த ஞான அறிவின்மை காரணமாகவும், நாளாந்த தேவைக்கான உதவும் வாகனங்களின் எரிபொருள் விலையேற்றம் அதிகரிக்க, முக்கிய பொருட்களின் விலைகள் அதிகரிக்க, அதற்கான காலத்தை நோக்கிக் காத்திருந்த இந்தியா வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும், இலங்கை அரசினுடனான சிங்கள அதிருப்தியாளர்களின் அல்லது வெறுப்பாளர்களின் உதவியுடன், இலங்கையில் சிங்கள மக்களால் முன்னெடுத்துவரும் பெரும் மக்கள் போராட்டத்தைத் தூண்டி நடத்தத் தொடங்கியுள்ளது.

அதே வேளை தனக்கும் நடந்து கொண்டிருக்கின்ற அரசுக்கெதிரான மக்கள் போராட்டத்திற்கும் எவ்வித சம்பந்தமுமே இல்லை என்பது போல இலங்கைக்கு உதவிகளையும் செய்து கொண்டும் இருக்கின்றது. உலகிலேயே, அடை மழைக்குள்ளும் அணையாமல் தீப்பந்தம் கொண்டு போகும் நுட்பமான செயல்திறன் வல்லமைக்கு ஒப்பான உளவு நிறுவனங்களாகச் சொல்லப்படுபவை அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ, இந்தியாவின் உளவு நிறவனமான றோ, ரஸ்யாவின் உளவு நிறுவனமான இ.எப்.ஐ.எஸ் என்பவற்றைத்தான்.



BCN TRAVELS (REISEBÜRO)
Consulting Network.ug
(Travels-Business-Worldwide)
RYANAIR
easyJet
KLM
Emirates
AIR CANADA
SINGAPORE AIRLINES
QANTAS
International Monye Transfers
Ria
Worldwide Money Transfer
small world
Last Minute Tickets avaliable on Sunday and Holidays
Tel : 01638714369
Flugtickete und hotel kann man auch hier buchen
Rheinische str-72
44137 Dortmund
023110876360
023110876361
Fax : 023110876362
bcntravels@hotmail.de
People's Insurance
Covid19 Insurance
Health Declaration Form
Ministry of Health - Sri Lanka
SRILANKA, INDIA CANADA, AUSTRALIEN,
SINGAPUR, ERUOPEA, UK, USA
AIR FRANCE
Lufthansa
OMAN AIR
QATAR AIRWAYS
AIR INDIA
BRITISH AIRWAYS
www.bcn-travels-dortmund.com



இலட்சுமணன்



# தமிழர்களின் நிலைப்பாட்டை மாற்றும் அரசியல்

இலங்கையில் என்ன நடக்கின்றது? என்று தெரியாத மாயவித்தையொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தற்போதைய நிலையில், பாராளுமன்றம் கூடி கலைவதுதான் செயல்பாடாக இருக்கின்றதே தவிர, நாட்டு மக்களின் பொருளாதாரப் பிரச்சினைக்கு எவ்வித தீர்வுகளும் காணப்படவில்லை. இந்த நிலையில்தான் இவ்வருட மே தினமும் நடைபெற்று முடிந்திருக்கிறது.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை இருக்கையில், தொழிலாளர்களின் சுதந்திர தினமாகப் பார்க்கப்படுகின்ற நாளில், மக்களின் அடிப்படையான பிரச்சினைகளுக்குத் தீர்வென்ன? என்று கேட்பதாகவே அமைந்திருந்தது. பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், கூட்டங்கள், பிரகடனங்கள் எல்லாமே ஏதோ ஒரு வகையில் 'கோட்டாவே வீட்டுக்குப் போ' என்பதை நினைவுப் படுத்துவதாகவே அமைந்திருந்தன.

இந்த இடத்தில்தான் பிரச்சினைகளால் நாடு பற்றி எரியும் போது, தமிழர்கள் தங்களை இதற்குள் இணைத்துக் கொள்ளாமை குறித்த கேள்விகள் எழுந்த வண்ணமிருக்கின்றன. உண்மையில் அதற்கு வெளிப்படையாகவே சொல்லப்படுகின்ற காரணம், இனப்பிரச்சினை தொடங்கிய காலத்திலிருந்து தமிழர்களுக்கு எதிராக யுத்தத்தினை நடத்துவதற்காகப் பெற்ற கடன்களாலேயே இந்த நெருக்கடி என்பதுதான். இந்த இடத்தில்தான் தமிழ் மக்களின் நிலைப்பாடு குறித்து பல வெப்புசாரங்கள் சிங்கள மக்களிடம் எழுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

நாடு பற்றி எரியும் வேளையில், நீரோ மன்னன் பிடில் வாசித்ததற்கு ஒப்பாக தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் நாட்டின் தற்போதைய நெருக்கடிச் சூழலைக் கையாளுதலை அல்லது கணக்கற்று இருப்பதனை எல்லோரும் ஒப்பிடுகின்ற நிலைமை உருவாகியிருக்கிறது. பொருளாதாரப் பிரச்சினைகளால் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் போராட்டங்கள் வெடித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால், அது குறித்து தமிழ் மக்கள் கொண்டிருக்கின்ற நிலைப்பாடு சரியா? தவறா? என்பதான கேள்விகளுக்கு இதுவரையில் சரியான பதில்கள் முன்வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அது, ஏதோ எங்கோ ஒரு இடத்தில் நிறுத்தப்பட்டோ, நின்றோ விடும் என்பது தமிழர்களின் நம்பிக்கை.

நாங்களெல்லாம் நீண்ட பல வருடங்களாக அனுபவிக்காத துன்பங்களாக இவற்றைக் கொள்ள முடியாது என்பதுதான் தமிழ் மக்களின் நிலைப்பாடு. அத்தோடு நாட்டில் இருக்கின்ற பிரச்சினைகளை, நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் நாம் எதிர்கொண்டேயாக வேண்டும். அரசியல்கள், அரசியல் கட்சிகள், அரசாங்கங்கள், ஆட்சித் துறையினருக்கு நாட்டு மக்களின் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கான வழிகளைத் தேடுவதே வேலையாக இருக்க வேண்டும்.

ஆனால் பிரச்சினைகளையும், சிக்கல்களையும் மேலும் ஊதிப் பெரிதாக்கி, அதில் மேலும் மேலும் மக்களை துவள வைப்பது சரியா? என்ற கேள்வியும், அதன் தொடர்ச்சியாக வந்த வண்ணமிருக்கிறது. இதற்கு நாட்டில் கர்த்தால் என்று அறிவிக்கப்பட்டு, நடைபெறுகின்ற கடையடைப்பு, தொழிற்சங்கப் போராட்டங்களை உதாரணங்களாக குறிப்பிட முடியும்.

இந்த இடத்தில்தான், ஒரு தேசமாக எமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பான தமிழர்களின் நீண்டகாலக் கேள்விக்கு இன்று தெற்கில் இடம்பெறும் போராட்டங்களில் பதிலேதும் உண்டா? என்று தமிழர் தரப்பின் வினவல் நெருடலாகின்றது. இலங்கையில் யுத்தம் வெறுமனே தானாக ஆரம்பிக்கப்பட்டதல்ல. அதற்கான சூழல், அஹிம்சைப் போராட்டங்கள் என பல முயற்சிகளின் பின்னர்தான் தமிழர்கள் மீது திணிக்கப்பட்டது என்பதுதான் வரலாறு.

ஆனாலும், இன்று தெற்கில் போராடிக் கொண்டிருக்கும் பொதுமக்கள், இளைஞர்களுக்கு தம் தோழமையைத் தமிழர்கள் இப்போது கொடுக்காமலில்லை. இருந்தாலும் அடிப்படையை உணர்ந்தார்களா? என்பதற்கான சரியானதொரு பதில் கிடைக்க வேண்டுமென்றே தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த எதிர்பார்ப்புத் தவறானதல்ல! என்பதே தமிழர்களிடமிருந்து வெளிப்படையாக முன்வைக்கப் படுகிறது.






பொருளாதார நெருக்கடிகளால் பெரும்பான்மை மக்களின் பெரும் பகுதியினர் போராடப் புறப்பட்டதற்கான காரணங்கள் தமிழர்களையும் தாக்காமலில்லை. ஆனால், அதனைச் சகித்துக் கொண்டே ஆகவேண்டும் என்ற பக்குவத்தில் தமிழர்கள் இருக்கிறார்கள். நாட்டில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னரும், யுத்தம் என்றால் என்ன? என்று அறிவதற்கான பக்குவத்திற்கு வருவதற்கு முன்னரும் பிறந்தவர்கள் இந்தச் சகிப்பினைக் கைக்கொள்ள கொஞ்சம் சிரமப்படத்தான் செய்வார்கள். அதனைத் தவிர்க்க முடியாது.

எது எவ்வாறாக இருந்தாலும், அயலிலுள்ளவர், நம்முடன் உள்ளவர்களுக்கு இன்னல்கள் ஏற்படும்போது, அதனைத் தீர்த்து வைக்க அல்லது கைக் கொடுக்காதவர்களை மனிதர்களாகவோ, சகபாடிகளாகவோ யாரும் எண்ணுவதில்லை. அந்தவகையில் தமிழர்களுக்கு இருக்கின்ற மனத்தடையைத் தீர்க்க வேண்டியது, நாட்டிலுள்ள பெரும்பான்மைச் சமூகத்துக்குள்ளது என்ற பொறுப்பையே தமிழர்கள் கோருகின்றனர். இந்த ஆத்மார்த்தமான கோரிக்கையைத் தவறாக எண்ணிவிட முடியாது.

இனப்பிரச்சினை தொடங்கிய காலத்திலிருந்து, தமிழர்கள் தங்களுடைய சிங்களப் பெரும்பான்மை வெறுப்பு மனோநிலையைக் காண்பித்தே வந்திருக்கின்றனர். அது தேர்தலாக இருக்கலாம், பொதுக்கருத்தெடுப்பாக இருக்கலாம். அதே போலவே ராஜபக்ச சகோதரர்களை 'வீட்டிலேயே இருங்கள்!, இந்த நாட்டிற்குத் தலைமை தாங்கும் தகுதி உங்களுக்கு இல்லை' என்று தமிழர்கள் 2005, 2010, 2015, 2019 என அனைத்துத் தேர்தல்களிலும் பதிலளித்தே இருக்கிறார்கள். இப்போது வாக்களித்து, ஆட்சிக்கு ஏற்றிய 69 லட்சம் மக்களே எதிர்க்கின்றனர்.

தென்னிலங்கையில் இடம்பெற்றுவரும் பொதுமக்கள் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்துக் கொள்வதற்கு தமிழர்களின் அரசியல் தரப்புகளும், சிவில் அமைப்புகளும் முயன்றே வருகிறார்கள். இந்த முயற்சிகளுக்குத் தடைகள் வராமலில்லை. அதற்குப் பட்டறிவுகளுடனான அனுபவங்களே காரணம். இதில்தான் காலி முகத்திடலில் இருந்து முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளில், இன்றைய பொருளாதாரச் சிக்கல்களுக்கு உண்மையான அடிப்படைக் காரணமான சிங்கள, பௌத்த மேலாதிக்க அபிலாசைகளுக்கு மாற்றீடுகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என்பதும், வெறுமனே நாட்டில் ஆட்சி மாற்றம் தமிழருக்கு அமைதியையும், நிம்மதியையும், கௌரவத்தையும் தந்துவிடப் போவதில்லை என்ற விடயம் சிக்கி நிற்கின்றது.



இந்த வகையில் தான், 'அண்மைய நாட்களில் தென்னிலங்கையில் முகிழ்த்து வரும் பொதுமக்கள் போராட்டங்களுக்கான ஆதரவைத் தமிழ் சிவில் சமூக அமையம் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றது' என்ற அறிக்கையும் முக்கிய பார்வைக்குரியதாகின்றது.

இந்தப் பொருளாதார நெருக்கடி காரணமாக பலர் பட்டிணியைத் தமது அன்றாடமாக்குகின்ற நிலைமை உருவாகி வருகின்ற நிலையில், இந்த நெருக்கடிக்கு இன்றைய அரசாங்கம் மாத்திரமே காரணம் என்று, அதனை ஆட்சிப் பீடத்திலிருந்து அகற்றுவதனால் தீர்வு வந்துவிடாது என்பதும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். அதில்தான் அடிப்படைக் காரணமாக இருக்கும். இனப் பிரச்சினைக்கான அரசியற் தீர்வு போராட்டத்தின் முதற் கோரிக்கையாக அமைய வேண்டும்.

இப்போது காலி முகத்திடலிலே சிங்கள இளையோர்களினால் மேற்கொள்ளப்படும் போராட்டத்தின் கோரிக்கைகளில், பொருளாதார வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணமாக இருக்கும் இனப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தர அரசியற் தீர்வினை ஏற்படுத்த வேண்டும் என்ற விடயம், முதன்மையான கோரிக்கையாக அமைந்திருக்க வேண்டும். அந்தப் பிரச்சினைக்கான தீர்வே நாட்டின் மீட்சிக்குரிய ஒரே வழி என்பதும், அதன் அடிப்படையும் தெரிந்திருந்தாலும், அதனை வெளிப்படையாக பொறுப்புடன் ஏற்றுக்கொள்ள யாரும் தயாரில்லை.

உண்மையிலேயே இந்த நாட்டில் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டதும், அதன் கரணமாக ஏற்பட்ட யுத்தமும், யுத்தத்தின் காரணத்தை அறிந்து, அதனை நிவர்த்திக்காது இந்த நாட்டு மக்கள் மீதே யுத்தத்தை மேற்கொள்ள மாறி மாறி ஆட்சி செய்த அரசுத் தலைவர்கள், பில்லியன் கணக்கான டொலர்களை வெளிநாடுகளிடம் கடனாகப் பெற்றமையானது நாட்டுக்குப் பெரும் சுமையே!.

இந்தச் சுமையைத் தூக்குவதற்குத் தமிழ் மக்கள் மீது போராட்டத்தினைத் திணித்த அனைவரும் தயாராக வேண்டும். அதனை விடுத்து தற்போதைய அரசாங்கத்திடம் மாத்திரம் அதனை விட்டுவிடுவது எவ்வகையில் நியாயம்? என்பது ஆட்சித் தரப்பின் கேள்வியாக இருக்கவேண்டும். ஆனால், அதனை அவர்கள் இன்னமும் வெளிப்படையாகச் செய்யவில்லை போலவே தோன்றுகிறது.

ராஜபக்ச குடும்பம் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற அடிப்படையில், ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச பதவியை இராஜினாமா செய்ய வேண்டும், ஒட்டு மொத்த அமைச்சரவையும் பதவிகளைத் துறக்க வேண்டும். ராஜபக்ச குடும்பத்தினர் எவருமே பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடாது. ராஜபக்ச குடும்பத்தால் அபகரிக்கப்பட்ட சொத்துகள் மீளப் பெறப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளே போராட்டக்காரர்களால் முன் வைக்கப் பட்டிருக்கின்றன. இது ராஜபக்ச குடும்பத்தின் மீதான கோபமாகவே



பார்க்கப்பட வேண்டும். ஆனால், இதனால் உருவாகின்ற மாற்றம், நாட்டை மீட்டு விடுமா என்றால், அது நிசப்த்தத்துடான சந்தேகமாகவே இருக்கும். வெறுமனே ராஜபக்ச குடும்பத்தினை மாத்திரம் வெளியேற்றி விட்டால் நாடு மீண்டுவிடுமா?.

நாடு பொருளாதார ரீதியாக மிகவும் அதள பாதாளத்திற்குள் விழுந்து கிடக்கின்றது. இலங்கை தற்போது இருக்கும் பொருளாதார நிலைமையை எந்தக்கட்சியோ, நபரோ ஆட்சிக்கு வந்தாலும், உடனடியாக நிமிர்த்திக் கொள்ளக்கூடிய நிலைமை இல்லை. இந்த உண்மையை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். பண்டா செல்வா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட போது, அன்றைய நிலையில் எல்லோரும் நிம்மதி ஏற்பட்டு விட்டதாகவே எண்ணினர். அன்று நாட்டில் ஒரு நிரந்தரமான அரசியற் தீர்வு ஏற்பட்டிருந்தால், இந்த நாட்டில் 30 வருடங்களுக்கு மேல் யுத்தமும் இடம்பெற்றிருக்காது.

அழிவுகள், பொருளாதார இழப்புகள் ஏற்பட்டிருக்காது. தமிழ் மக்களின் மனங்களில் இவ்வளவான வெறுப்பும், பட்டிறிவும் பதிந்தும் இருக்காது. அத்தோடு யுத்தத்திற்காக மாறி மாறி வந்த அரசாங்கங்கள் டொலர்களைச் செலவு செய்ய வேண்டிய தேவையும் இருந்திருக்காது. ஆனால், நடந்தது என்னவோ வேறு. தொடர்ச்சியாக இப்போதும் இனவாதம் ஊட்டி வளர்க்கப்படுகின்ற இளைஞர்களையே நாம் காண்கிறோம். அதனை அடிப்படைவாதிகளும், அரசியல் கட்சிகளும் செய்தே வருகின்றன. அதில், இணைந்திருந்த வடக்கு, கிழக்கு மாகாண சபைகளைப் பிரித்தமையை நாம் ஒரு நல்ல உதாரணமாகக் கொள்ளலாம்.

இந்த இடத்தில்தான் யுத்தத்திலும், அதற்கு முன்னரும், பின்னரும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சொந்தங்கள் 1,800 நாட்களையும் தாண்டி இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தப் போராட்டத்தில் எமது தமிழ் இளைஞர்களின் பங்கு என்ன? எமது தமிழ் இளைஞர்கள் காலி முகத்திடல் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என எங்கள் மக்களின் பிரதிநிதிகளே அறைகூவல் விடுக்கின்றனர். இவ்வாறு அறைகூவல் விடுபவர்கள் எமது உறவுகளின் போராட்டத்தில் இளைஞர்களை உள்வாங்குவதற்கு எவ்வித அக்கறையும் அற்றவர்களாகவே செயற்பட்டிருக்கின்றார்கள்.

தற்போதுள்ள பொருளாதாரப் பின்னடைவினால் சிங்கள மக்கள் மின்சாரம், எரிபொருள், குழந்தைகளுக்கான பால்மா போன்ற பொருட்கள் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால், இன்று போராடுகின்றார்களே தவிர, பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டமைக்கான மூலக் காரணத்தைக் கண்டுபிடித்து, அதனை நிவர்த்தி பண்ணுவதற்கு எந்தவிதமான எத்தணிப்பும் காட்டவில்லை. இந்த விடயத்தில் நாங்கள் சற்றுச் சிந்திக்க வேண்டும் என்ற தமிழ்த் தரப்பின் கேள்வி நியமானதாகவே இருக்கிறது எனலாம்.

அதே நேரத்தில், தமிழ் மக்களுடைய அரசியலை நகர்த்துகின்ற தரப்புகளின் ஒருமிப்பின்மை தமிழ் மக்களை மேலும் பிரித்து வைத்தே வருகிறது. அதிகார அளவுகளுள்ள தரப்புகளாகத் தமிழ் அரசியல் தரப்புகள் செயற்படத் தயாராக வேண்டும். அதற்கு சுயநல, கட்சி நல அரசியல் விட்டொதுக்கப்பட வேண்டும்.

மொத்தத்தில், அரசியல் பாரபட்சம், இனப் பாகுபாடு, தரப்படுத்தல், நெருக்கடிகளால் நாட்டைவிட்டு



வெளியேறிக் கொண்டே இருந்த மூளைசாலிகள் இன்றும் வெளியேறிக் கொண்டே இருக்கிறார்கள். நாட்டின் பாரபட்சம் இல்லாமலாக்கப் படவில்லை. தமிழ் மக்களின் சுதந்திரம் உறுதிப்படுத்தப் படவில்லை. இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர அரசியற் தீர்வு ஏற்படுத்துவதற்கான தீர்க்கமான செயற்பாடில்லை. இவ்வாறிருக்கையில் தமிழ் மக்களுக்கு வேறு என்னதான் நிலைப்பாடு சார்ந்து முடிவிருக்கமுடியும்?.

ஆனாலும், தமிழர்களுடைய நிலைப்பாடு வேறாக இருந்தாலும், இந்தச் சூழலில் பிடில் வாசித்தக் கதையாக இருப்பது பொருத்தப்பாடற்றதே என்பது பலருடைய பார்வையாக இருந்தாலும், நிலைப்பாட்டை மாற்றுவதும் அரசியலாக இருந்தாலும் நிலைப்பாடு ஒன்றாகவே இருக்கிறது. இந்த ஒன்றிப்பும் பயனற்றே போகும் என்றாலும், காலத்தை இழுத்தடிக்கின்றதானக் கடைப்பிடிப்புக்கு இன்னும் காலம் கிடைத்திருக்கிறது. இந்த இழுத்தடிப்பின் தொடர்ச்சியும், தமிழர்களுக்கான காலத்தைத் தள்ளியே போடும்.

எது எவ்வாறானாலும் ஆட்சி மாற்றம், அதன் பின்னர் உருவாகும் அரசாங்கம், தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் கட்சிகளுடன் பேசுவதுடன், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழர்களின் விடயம் தொடர்பான நிலைப்பாடு கடந்த காலங்களைப் போலல்லாமலும், வாய்ச்சொல்லில் மாத்திரமல்லாமலும் எழுத்து மூலமாக சர்வதேசத்தின் முன்னிலையிலான உத்தரவாதமாக இருக்கும் பட்சத்தில் ஆதரவு, ஒத்துழைப்பை யோசிக்கலாம் என்பது தமிழர் நலன்சார்ந்த உறுதியான நிலைப்பாடே.

அந்த வகையில்தான் தமிழர்களின் நிலைப்பாட்டை மாற்றும் அரசியல் வெற்றி பெறுமா? அல்லது தோற்று, அந்த நிலைப்பாட்டை மேலும் ஒரு முறை உறுதியானதாக இலங்கைக்கும், குறிப்பாக பெரும்பான்மை சமூகத்துக்கும் உணர்த்தும் என்பதே எதிர்பார்ப்பு.



# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்

தமிழர்,
வரலாற்றுப் பழைமைகளில்
நெஞ்சை நிமிர்த்தி,
வரப்போகும் குழந்தைக்குத்
தேடுகிறார் பெயர்
வேற்று மொழியில்!

மகிழி



"உளம் திறக்கும் உண்மைகள்...;" என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### பணம்!..
பணத்தை கோடியாகச் சேர்த்து
பிணமாக மாறுவதை விட
குணம் சேர்த்து மகிழ்ச்சியான
வாழ்வே சிறந்த வாழ்வு!..

### பயனில்லை!..
கண்ணுக்குத் தெரிந்த
மனிதரை மதிக்காவிட்டால்
கண்ணுக்குத் தெரியாத கடவுளை
வணங்கினாலும் பயனில்லை!..

### சூறாவளி!..
அப்பு நட்டுவைத்த தென்னைமரம்
ஆச்சி நட்டுவைத்த மாமரம்
ஒரு நிமிடச் சூறாவளியில்
ஆணிவேருடன் சரிந்து கிடந்தன!..

### மூத்தகுடிகள்!..
மண்ணைப் பறிக்கும் தொல்லியல்
மதத்தை ஆக்கிரமிக்கும் புத்தமதம்
மனிதத்தைத் தேடி அலையும்
மூத்த முதல் தமிழ்க்குடிகள்!..

● வைரமுத்து சிவராசா,
யேர்மனி


### நின்மதி..
பிடிக்காத விடயத்தை
கண்டுகொள்ளாமலும்,
தேவையற்ற கேள்விகளுக்கு
பதில் சொல்லாமலும்,
வேண்டாத விடயத்தில்
கவனம் செலுத்தாமலும்,
அழுக்கான எண்ணங்களை
மனத்திடை ஏற்றாமலும்
இருந்தாலே போதும்
உடலும் மனமும் வீடும்
நின்மதியாக இருக்கும்.

### போர்வலி
பிணக்குவியல், மரணஓலம்
இரத்தஆறு, குண்டுமழை
கண்ணீர், வெள்ளம்
எங்கள் செங்குருதியால்
சென்னிறமாகியது நந்திக்கடல்
சிக்குண்டு சீரழிக்கப்பட்டு
இழுத்து வரப்பட்டோம்
உறவுகள் பிரிக்கப்பட்டு
அம்மணமாக்கி
கைகள் கட்டப்பட்டு
பின் சுடப்பட்டோம்
மண்டியிடுவதை விட
மரணமே மேல் என்பதால்

● பாமினி

### இலங்கை எரியுது
அனுமான் மூட்டிய தீ
அன்று எரிந்தது இலங்காபுரி.
பக்க்ஷே மூட்டிய வினை
பத்தி எரியுது இப்போ பலன்.
முற்பகல் செய்யின்
பிற்பகல் விளையும்.
கண் கூடே காணும்
மனிதா நீயும் கவனம்.
நீ செய்யும் இழிசெயல்
நிச்சயம் உன்னிடம் திரும்பிவரும்.
இதைப் பார்த்து மனித இனம்
இனியாவது செய்யாதே தப்பை.
இல்லையெனில் சேர்த்த
பணம், வீடு வாசல் இப்படியே
தீக்கிரையாகும் ஒரு நாள்
இது இயற்கையின் நியதி.

● கெங்கா ஸ்டான்லி




# கதைகள் விற்பனைக்குண்டு

களிறுகளால் மிதிபட்டு
கட்டெறும்புகள் இறப்பது
வழமையாகிப்போன காடு அது

மாற்றுவழி சமைத்து
மரங்களில் ஏறின
கட்டெறும்புகள்

மரங்களையும் வீழ்த்தின
மதங் கொண்ட களிறுகள்.

நீரில் மிதக்கும்
இலைகளின் மீதமர்ந்து
இருப்பைத் தக்கவைக்க
இயன்று பார்த்தன எறும்புகள்.

வெள்ளம் வந்து கூண்டோடு
தள்ளிப் போயிற்று.



இது எம் நிலம்
இனி எங்கேயும்
ஓடமுடியாது என்றன
எறும்புகள் சில.

அதற்காக அடிபட்டுச்
சாகமுடியுமா என
அழுதுவடிந்தன
சில எறும்புகள்.

களிறுகளை
எதிர்ப்பதெல்லாம்
கைகூடும் காரியமா என;
சிடுசிடுத்தன
சிந்திக்க மறந்த
கட்டெறும்புகள் சில.

வழியிருக்கிறது,
வாழ நிலமிருக்கிறது
எங்கேயும் ஓடி
ஏதிலிகளாகப் போவதா என
எறும்பொன்று முழங்கியது.

எங்களில் சிலர்
இன்னுயிர் கொடுத்தால்
எம்மினம் வாழும் என்றது
இன்னொரு எறும்பு

கலந்துபேசித் தெளிந்தன
கட்டெறும்புகள்.

மூர்க்கமாய் வரும் களிறுகளின்
மூக்கினுள் நுழைந்து
மூளைவரை சென்று
தாக்குவதை முடிவாக்கின.

களிறுகள் வரும்பாதையில்
காத்திருந்தன எறும்புகள்.
காடதிர நடந்து வந்த களிறுகள்
ஓயும் நேரத்தில்
உட்புகுந்து தாக்கின.

நடப்பது அறியாமல்
நாற்றிசையிலும் ஓடின களிறுகள்.

இனம் காக்கச் சென்ற எறும்புகள்
இருப்பிடம் திரும்பவில்லை.
அன்றிலிருந்து களிறுகள்
அக்காட்டினுள் வருவதுமில்லை.

கதைகள் தேவைப்படுவது
மனிதர்களுக்குத்தான்,
கட்டெறும்புகளுக்கல்ல...

● தேவன்



# அன்னை

கருப்பையில்
அன்போடு சுமப்பவள்
அன்னை

வலி என்று தெரிந்தும்
வரம் கேட்டு நிற்பவள்
அன்னை

மறு பிறவி எடுத்து
உனக்கு உயிர் தந்தவள்
அன்னை

நான் பார்த்த
முதல் அழகியும்
அவளே

என்னைடைய
உலக அழகியும்
அவளே

துன்பம் வரும் போது
அன்னை மடியே
சொர்க்கம்

அன்னையை
வணங்குவோம்

அன்னையை
போற்றுவோம்.

● நந்து

பாகம் : 26

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# பதிலடி பழிவாங்கல்

## தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்



சப்பானின் மீது அணுகுண்டு விழுந்த சில நாட்களில், சப்பானும் பதிலடியாக அமெரிக்கா மீது அணுகுண்டு போட்டதாக ஒரு வதந்தி இரோசிமா மருத்துவமனையில் பரவியது. அப்பொழுது அங்கிருந்து ஒரு மருத்துவர் கவனித்தது என்னவென்றால், அமெரிக்காவில் குண்டுவிழுந்த பின்னர் இரோசிமாவில் அன்றுதான் அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். எவர் மிக அதிகமாக காயம் பட்டிருந்தார்களோ அவர்கள்தான் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

பழிவாங்குதல் என்பது காம உணர்ச்சி போன்று பொதுவானது. அது சிந்தித்து வருவதல்ல, தானாக வருவது. நாம் சந்தித்த இனவழிப்பு போன்று எவருக்கும் வரக்கூடாது என்றுதான் நாம் நினைக்கிறோம். அது நமது உயர்ந்த நாகரீகப் பண்பாடு. ஆனால் அதே நேரம் நாம் இழந்த உரிமைகளைக் கூட பெற முயற்சி செய்யாமல் இருந்தால், நாம் உணர்ச்சி அற்ற பிணம் என்றுதான் கூறவேண்டும்.

பழி வாங்குவது என்பது, நவீன சமூகங்களில் மோசமான செயலாகப் பார்க்கப்படுகிறது. ஏனெனில், அது சமூகத்தில் வன்முறையைப் பெருக்கி, செயலிழக்க வைக்கும். அதனால் அரசு ரீதியான தண்டனை அளிக்கும் பொறுப்பை ஏற்று, பழிவாங்குதலை தேவையற்றதாக மாற்றியது. ஆனால் நாடுகளுக்கு இடையே தவறு செய்பவர்களைத் தண்டித்து, நீதி அளிக்க யாரும் இல்லை. (இன்றைய ஐநா அதுபோன்ற அமைப்பு இல்லை.) இதனால் நாடுகளுக்கு இடையே பழி வாங்குவதற்குத் தொன்றுதொட்டு போர்கள் நடக்கின்றன. அதன் மூலமே ஒரு நாடு தனக்கான நீதியை, வலிமையினால் பெற்றுக் கொள்கிறது.

பழிவாங்குதல் என்பது, ஒரு தூய்மைப் படுத்தும் நிகழ்வு. போரிடும் இரு தரப்பில் ஒரு தரப்பு மட்டுமே வென்றிருந்தால், அவர்களுக்கு இடையே நட்பு ஏற்பட வாய்ப்பு இல்லை. ஆனால் தோற்ற தரப்பு, அடுத்த படை நடவடிக்கையில் வெற்றி பெற்றால், இரு தரப்பும் சமமாக உணரும். அப்பொழுது நட்பு ஏற்படும். இவ்வாறு பழிவாங்குதல் என்பது பகையை அழித்து, நட்பை ஏற்படுத்துகிறது.

பழி என்பது உடனுக்குடன் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அது மனதைத் தூய்மைப் படுத்துவதாக அமையும். இல்லையென்றால் அது உளவியல் சிக்கலை ஏற்படுத்துகிறது. அது சமூகத்தில் கட்டுக் கதைகளாக, கற்பனைகளாக வடிவமெடுக்கிறது. உதாரணமாக அமெரிக்க தெற்கில் இது ***"The Lost Cause"***, பிரான்சில் "பழி வாங்கும் கனவு", யேர்மனியில் "தோற்காதப் படை" என்ற கற்பனைகள் வெளிப்பட்டன.

தமிழ் சமூகத்திலும் அதுபோன்ற கற்பனைகள், குறிப்பாகத் தலைவரைப் பற்றி இருக்கிறது. இக்கற்பனைகள் எல்லாம் இழப்புகளைத் தாங்கிக் கொள்வதற்கு உண்டானவை. அவை தாங்க முடியாத உளவியல் பாதிப்பைத் தடுக்கும் அரண்கள். இக்கற்பனைகள் என்பது புண் ஏற்பட்டால், இரத்தம் உறைந்து, காயத்தை ஆற்றுவது போன்றது. மேலும் இக்கற்பனைகள் ஒரு சமூகத்தின் பழிவாங்களை ஒத்திப் போடுகிறது.

அனைத்து தோல்விகளும் பழிவாங்கும் உணர்ச்சியை ஏற்படுத்துவதல்ல. ஒரு நாட்டை பல நாடுகள் எதிர்க்கும் பொழுது, தனியாக ஒரு எதிரி என்பது இல்லை. அதனால் தோற்ற நாடு தான் யாரையும் விட தாழ்ந்தவனாகப் பார்க்காது. மாறாக வெற்றி பெற்ற அணியின் பலமான நாட்டுக்கு இணையாகத் தன்னைக் கருதும். பழி வாங்கும் உணர்வு இருக்காது, ஆனால் நீதியை எதிர்பார்க்கும்.

நாடுகளுக்கு இடையே பழிவாங்கல் என்பது பொதுவாக இரு சந்தர்ப்பங்களில் ஏற்படுகிறது:

**1.** ஒரு நாட்டின் நிலத்தை எதிரி கைப்பற்றி கட்டுப்பாட்டில் வைத்திருந்தால், பழிவாங்குவதற்கு போர் நடக்கும். நில இழப்பு இல்லை என்றால், பழிவாங்குவதற்கு போர் ஏற்படாது. உதாரணமாக **1973**-இல் இசுரேலின் மீது சிரியாவும், எகிப்தும் **1967** போரில் இழந்ததை பழி வாங்கவதற்கென்று போர் தொடுத்தது. அரசென்டினாவுக்கும், பிரிட்டனுக்கும் பாக்லாந்து போர் ***(Falkland war)*** என்பது ஒரு பழிவாங்கல் போர். பாகிசுதான் இந்தியாவுடனான போர்களில் இன்றைய பங்களாதேசையும், காசுமீரிலும் நிலங்களை இழந்திருக்கிறது. அதன் விளைவாக பல பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. இந்தியாவை ஆயிரம் வெட்டுக்களால் வெட்டி சாய்ப்போம் என்று உறுதியுடன் பழிவாங்கும் நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது.

**2.** ஒரு பெரிய நாட்டை, ஒரு சிறிய நாடு அவமானப் படுத்தினால் பழிவாங்கும் உணர்வு மேலிடும். உதாரணமாக அமெரிக்காவின் மீதான அல்கொய்தாவின் இரட்டை கோபுரத் தாக்குதல் உளவியல் பாதிப்பை ஏற்படுத்தி, பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டியது. ஆனால் அல்கோயதாவிற்கு நாடில்லை, யாரைப்போய் பழி வாங்குவது? ஆனால் யாரையாவது பழிவாங்க வேண்டும் என்ற அழுத்தத்தில் அமெரிக்க சனாதிபதி இருந்தார். அதன் விளைவுதான் ஆப்கானிசுத்தான் படை எடுப்பு, ஈராக் மீது தாக்குதல், தீவிரவாதத்திற்கு எதிரான போர் என்பதெல்லாம். அன்றைய அதிபர் புஷ் அவர்களின் தந்தை அதிபராக இருந்த பொழுது, சதாம் உசைன் அவரைக் கொல்ல முயன்றார் என்று நம்பப் படுகிறது. அது சதாம் உசேனை பழிவாங்குவதற்குக் கூடுதல் காரணம் ஆகியது.

ஒரு நாடு பாரிய இழப்பின் பின்னர் மேலும் அதிக போரில் ஈடுபடுகிறது. அவ்வாறு போரிடும் நாடு, மற்ற நாடுகளையும்




தாக்குகிறது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதுவும் மனித உளவியல்தான். வெளியில் இருக்கும் சிக்கலைத் தீர்க்க முடியாமல், மனைவியை அடிப்பவர்கள் உண்டு. பழிவாங்கல் என்பது எங்கு வேண்டுமானாலும் பாயும். இதைப் போன்ற மேற்குலகின் பழி வாங்கல் ஈழத்தின் மீதும் பாய்ந்திருக்கலாம் என்பதை எளிதில் நிராகரிக்க முடியாது.

இந்தியாவும் ஈழத்தைப் பழிவாங்கும் நோக்கில் செயல்பட்டது என்று கூறலாம். இதற்கு ஒரு காரணம் என்பது, பெரிய பிராந்திய வல்லரசு என்ற இந்தியாவைத் தனியாக எந்த நாட்டின் உதவியும் இல்லாமல் புலிகள் தோற்கடித்தார்கள். இது பெருத்த அவமானம். அதுபோக இராசீவ்காந்தியைப் புலிகள்தான் கொன்றார்கள் என்றும் நம்புகிறார்கள். அவமானத்திற்கு மேல் அவமானமாக உணர்ந்தார்கள். இந்த பழிவாங்கும் உணர்வைக் குறிப்பாக ஆளும் வர்க்கத்தினரிடம் அதிகமாகவே காணலாம். அவர்களின் நலனுக்கு பாதிப்பு என்று உணர்ந்தும், இந்தப் பழிவாங்கலை மேற்கொண்டனர்.

இன்று பாரிய இழப்புகளைச் சந்தித்து தமிழர் தேசம் நிற்கிறது. பழிவாங்கும் வரலாறு நமக்கு கூறும் பாடம் என்ன? பழிவாங்குதல் என்பது இருபக்க கத்தி போன்றது. அதை மிதமிஞ்சி பயன்படுத்தினால் நம்மை நாமே வெட்டிக் கொள்வோம். பயன்படுத்தவில்லை என்றால் உணர்வற்ற பிணம் போன்று எந்த உரிமையும் பெற முடியாது. பழிவாங்கலை ஒரு ஆக்கப்பூர்வமான சக்தியாகப் பயன்படுத்த வேண்டும். மாறாக மற்ற இனங்களை அச்சுறுத்துவதாக மாறக் கூடாது, சம்பந்தமில்லாத மற்றவர்களின் மீது பழிவாங்கும் எண்ணமாக மாறக் கூடாது.

இரண்டாம் உலகப்போரில் இழந்த சப்பான், அவர்களின் பழிவாங்கும் உணர்வுகளைப் பொருளாதார வல்லமை கொண்ட நாட்டை உருவாக்குவதை நோக்கி திருப்பினார்கள். யூதர்கள் பழிவாங்கும் உணர்வைத் தங்கள் அடையாளத்தைக் காப்பதற்கென்று இறைக் கோட்பாட்டை உருவாக்கினார்கள். அக்கோட்பாட்டில் தங்கள் கடவுள் மட்டுமே உலகை ஆளும் ஒரே கடவுள், மற்ற கடவுளர் எல்லாம் வெறும் பொம்மைகள் என்று கட்டுக் கதைகள் மூலம் பழி வாங்கினார்கள். நாம் அதைப்போன்று நமது அடையாளங்களைக் காத்து, நமது உரிமைகளை வென்றெடுப்பதற்குத் தேவையான கட்டுமானங்களை உருவாக்குவதை நோக்கி நமது பழிவாங்கலைத் திருப்பவேண்டும்.

## புதுப்பித்தல்

தோல்வி என்பது தேசத்திற்கு தாங்கமுடியாத உளவியல் வலியை ஏற்படுத்தினாலும், அது புதுப்பித்தல் என்ற ஒரு பெரிய நன்கொடையைக் காலகாலமாகத் தோற்றவர்களுக்கு மட்டுமே அளிக்கிறது. பழையவற்றைக் களைந்து தன்னைப் புதுப்பிக்காமல், மீண்டும் வெற்றி நிலையை அடைய முடியாது என்பதால், இழப்பைச் சந்தித்த சமூகத்தின் உளவியல் இயற்கையாகவே புதுப்பித்தலை நோக்கி நகரும். ஆனால் வெற்றி பெற்ற பக்கத்தில் புதுப்பித்தலுக்கு ஆதரவான உளவியல் இருக்காது. அடிப்படையில் புதுப்பித்தல் என்பது இரு செயல்பாடுகளின் வழியாக நடைபெறுகிறது.

1. உலகின் பழைய மீளெழுச்சி வரலாறுகளில் இருந்து கற்பதும், ஆறுதல் கொள்வதும் ஒரு வழி. உதாரணமாக 19 ஆம் நூற்றாண்டில் பிரான்சுக்கும், யேர்மனிக்கும் பிரசியாவின் ***(Prussia)*** மீளெழுச்சி பாடங்களை வழங்கியது. 1806-இல் பிரசியாவை நெப்போலியன் ***Jena-Austerdt*** போரில் வீழ்த்தினார். அந்த வீழ்ச்சியில் இருந்து மீளெழ பிரசியா பெரிய சீர்திருத்தங்களை மேற்கொண்டது. அதில் முதன்மையானது அனைவருக்குமான பொதுக் கல்வியைக் கொண்டுவந்து, அதன் மூலம் சிறந்த படைவீரர்களை உருவாக்கியது. உலகில் முதன்முதலில் பொதுக் கல்வியை உருவாக்கிய முன்னோடி பிரசியா.

இன்றைய பள்ளிகள் எல்லாம் அவர்களை நகலெடுத்து உருவானதே!. இவ்வாறு மீளெழுச்சி கொண்ட பிரசியா பின்பு யேர்மனியாக மாறி, 1871-இல் செடான் ***(Sedan)*** போரில் பிரான்சை தோற்கடித்தது. தோற்ற பிரான்சு பிரசியாவின் சீர் திருத்தங்களை முன்னோடியாக, வழிகாட்டியாகப் பார்த்து, தன்னைச் சீர்படுத்திக் கொண்டு முதல் உலகப்போரில் 1918 -இல் யேர்மனியை வீழ்த்தியது. இப்பொழுது யேர்மனி தன்னை சீர்திருத்த பழைய பிரசியாவை முன்னோடியாகப் பார்த்தது. இவ்வாறு இருவரும் போரிடுவது, தோற்பது, புதுப்பிப்பது

வாடிக்கையாளர்களின் பேராதரவுடன்
20ஆம் ஆண்டில்....

SK
SINCE 2003

# S.K. Silks & Gold Paradise

மாபெரும்
ராஜ
முத்திரை



ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

என்று சுழற்சியால் சென்றார்கள். ஐரோப்பிய நாடுகளின் முன்னேற்றத்திற்கு இந்த போர்களின் தோல்வி மூலம் ஏற்படும் கற்றலும், சீர்திருத்தங்களும் ஒரு முக்கிய காரணம். அவர்களின் முன்னேற்றத்திற்கான ஊக்கம் என்பது தோல்விகளிலிருந்து வந்தவை, வெற்றிகளிலிருந்து அல்ல.

## பழைய பொற்காலத்தைத் தேடுதல்

ஒவ்வொரு நாடும் தோல்வியின்பின் மீளெழுச்சி கொள்ள, தனது பழைய பொற்கால வரலாற்றைப் புரட்டி, அதிலிருந்து பாடங்களை கற்றுக் கொள்ளும், குறிக்கோள்களைத் தெளிவுப்படுத்தும், ஆன்ம பலத்தைப் பெரும். அமெரிக்க 1865ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிந்த நிலையில், அவர்கள் மீண்டும் ஒற்றுமை கொள்ள 1800இல் ஜெபர்சன் அதிபராக இருந்த காலத்தை நினைவு கூர்ந்தார்கள். 1871 போரில் தோற்ற பிரான்சு தனது 1789 பிரஞ்சு புரட்சி காலத்தை நினைவு கூர்ந்தது; அதுபோல 1918 -இல் தோற்ற யேர்மனி தனது புரட்சி காலமான 1848-ஐ நினைவு கூர்ந்தது. சப்பான் ஐரோப்பிய ஆக்கிரமிப்பை எதிர்க்க, தனது பழைய வரலாற்றின் துணைக் கொண்டு 1853-இல் மெய்சி புரட்சியை நடத்தி, தன்னை புதுப்பித்துக் கொண்டது. ஒரு நாட்டின் புதுப்பித்தல் என்பது அவர்களின் வரலாற்றின் துணையுடனே நடக்கிறது.

நாம் 2009 பின்னடைவுக்குப் பின்னர் புதுப்பித்தலைப் பற்றி எந்த பெரிய சிந்தனையும் இருப்பதாக இல்லை. இன்னும் கனவு நிலையில் இருக்கிறோம் அல்லது நீதிகோரி நிற்கிறோம். நாம் வெளிப்படையாக புதுப்பித்தலை நோக்கிச் சிந்தித்து செயலாற்றுவதற்கு நேரம் வந்து விட்டது என்றே நினைக்கிறேன். நமது மீளெழுச்சி என்பது புதுப்பித்தல் இல்லாமல் நடக்கப்போவது இல்லை. அதற்கு நாம் செய்யவேண்டியது:



1. உலக நாடுகள் எவ்வாறு இழப்பிலிருந்து மீண்டன? என்பவற்றை ஆழமாக ஆராய்ந்துப் பாடங்களைக் கற்கவேண்டும்.

2. நமது பொற்கால வரலாற்றின் அடிப்படையிலே புதுப்பித்தல் நடைபெற வேண்டும். இங்கு முக்கிய கேள்வி என்பது, நமது பொற்கால வரலாறு எது? பலர் சோழர் காலம் பொற்காலம் என்கிறார்கள். ஆனால் அவ்வரலாறு என்ன? அதிலிருந்து என்ன கற்கலாம்? என்பது தெளிவாக இல்லை. என்னுடைய பார்வையில் நம்மை புதுமைப் படுத்திக் கொள்வதற்கான வரலாறு, ஈழப்போரில்தான் இருக்கிறது.

ஈழப்போரின் பொற்காலம் என்று நான் காண்பது 1976 -இல் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தில் ஆரம்பித்து, ஆணையிரவைக் கைப்பற்றி, அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்தி, நடைமுறை அரசு நடத்தி, நான்காம் ஈழப்போர் துவங்கும் 2006 வரையான காலம். இக்காலத்தில் தான் தமிழினம் அடிமைத்தளையில் இருந்து போரிட்டு, எழுந்து நடைமுறை அரசை நிறுவிய காலம். நமது புரட்சிக்கான ஆரம்பம் என்பது 1976 வட்டுக் கோட்டைத் தீர்மானித்திலிருந்தே ஆரம்பிக்கிறது. அப்பொழுதுதான் தலைமைப் பொறுப்பு அரசியல்வாதிகளிடம் இருந்து இளைஞர்களிடம் செல்கிறது. அப்பொழுதுதான் விடுதலைபுலிகள் இயக்கம் பெயரிடப்பட்டு, புலிப் பண்பாட்டின் அசுர வளர்ச்சி ஆரம்பிக்கிறது.

பிரபாகரன் சட்டகம் நூலை வாசித்தபின் பலர் கூறும் ஒற்றை வாக்கியம் என்பது "புலிப் பண்பாடு மீளுருவாக்கம் செய்யப்படாமல் இங்கு எதுவுமே சாத்தியமில்லை" . புலி பண்பாட்டில்தான் நமது மீளெழுச்சிக்கான அடித்தளம் இருக்கிறது. புலிப் பண்பாடு என்றால், போர் செய்யவேண்டும் என்று பொருள் அல்ல. மாறாக புலிப் பண்பாட்டில் இருந்து இன்றைய போராட்ட வழிமுறைகளுக்குத் தேவையான பொறிமுறைகளை உள்வாங்கிக் கொள்வதே!.

நமது 1976 வட்டுக்கோட்டை புரட்சியின் வடிவம் என்பது அடிப்படையில் தலைமைப் பொறுப்பு என்பது தேசப்பற்று கொண்ட

இளையவர்களுக்கு செல்வதே!. அந்த வழியில் பார்த்தால் அது தமிழகத்தில் 2009இல் ஆரம்பமாகிவிட்டது என்றே சொல்ல வேண்டும். இளைஞர்களும் மீசை முளைக்காத பையன்களும் இணைந்து, பிரபாகரனைத் தலைவனாகக் கொண்டு, நாம் தமிழர் அமைப்பை உருவாக்கினர். இது ஒரு ஆரம்பம்.

இது புலிப் பண்பாட்டின் மீளுருவாக்கத்தின் ஆரம்பம் என்றும் கூறலாம். மீளெழுச்சியைப் பழமையின் சாயலிலே தான் தேசங்கள் அமைக்கின்றன. இது மக்களிடம் தோன்றும் இயற்கையான உளவியல். அந்த வகையில் நாம் தமிழர் தமிழின மீளெழுச்சியின் முன்னோடியாக இருக்கிறது என்பது மிகையில்லை. மீளெழுச்சி என்பது முழு வடிவம் இன்னும் பெறவில்லை. இது ஆரம்ப கட்ட நிலையில் பல சிக்கல்களுடன் நிற்கிறது. இதற்கு ஒரு முழு வடிவம் கொடுத்து, உலக அளவில் பெருவடிவாமாக முன்னெடுக்கப்பட வேண்டும். புலிப் பண்பாட்டைக் கொண்டு, இதை எவ்வாறு செய்து முடிப்பது? என்பதை தனித்து இன்னொரு பகுதியில் பார்ப்போம்.

புலிகளின் வரலாற்றை நிராகரித்துவிட்டு, மீளெழுச்சி என்பது சாத்தியமில்லை. ஏனெனில் அதற்கு அடிப்படையாக வேறு எந்த வரலாறும் தமிழினத்தில் இல்லை. இதற்கு முந்தைய வரலாறு எல்லாம் எதிரிகளுக்கு அடிபணிவது மட்டுமே!. வட்டுக்கோட்டை தீர்மானத்தையும், புலிகளின் வரலாற்றையும் நிராகரிப்பவர்களுக்கு இருக்கும் பாதைகள் குறுகியதே!. ஒன்று சிங்களத்திடம் அடிபணிய வேண்டும், இல்லையென்றால் இந்தியாவிடம் அடிபணிய வேண்டும்.

சிலர் திராவிடத்தால் தமிழினத்தை மீட்க முடியும் என்று நம்புகிறார்கள், ஆனால் திராவிடத்திற்குத் தேசியம் சார்ந்த வரலாறு எல்லாம் கிடையாது. தன்னாட்சி கேட்டு பேசியிருக்கிறார்கள், ஆனால் அதற்குக் கூட போராடவில்லை, இப்பொழுது மறந்தே விட்டார்கள். திராவிடம் மாற வேண்டுமானால் அதற்கு இழப்பைச் சந்தித்த உளவியல் தேவை. இன்று அவர்கள் வெற்றியின் மமதையில் இருப்பவர்கள். அவர்களை மாற்றுவது மிகக் கடினமானது.

தமிழர் மீளெழுச்சி என்பது புலிப் பண்பாட்டு மீளுருவாக்கத்தில் மட்டுமே இருக்கிறது. இதுதான் மற்ற நாடுகளின் மீளெழுச்சி வரலாறு நமக்குக் கூறும் பாடம்.



கல்லெறி வேலுப்பிள்ளை

# "என்ன கொடுமை சரவணா!"



**வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?**

**நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. போறபோக்கில சிறிலங்காவில பொருட்களுக்கு தட்டுப்பாடு வந்த மாதிரி, ஐரோப்பாவில வந்தால் எப்பிடி இருக்கும் எண்டு சிந்திச்சுப் பார்த்தன். என்ர ஆத்தே, ஒரு கணம் கலங்கிப்போனன் கண்டியளோ.**

அங்கயாவது வயல் தோட்டம் துறவு எண்டு ஏதாவது ஒண்டு இருக்கும் பாருங்கோ. இஞ்ச இருக்கிற வீடே வாடகைதான். பிறகு என்னத்தை வச்சு வாழுறது எண்டு தெரியேல்லை. இருக்கும் மட்டும் எந்த நோயும் வந்திடக்கூடாது எண்டு கும்பிடுறதிலும் பாக்க, எந்தப்பொருளுக்கும் தட்டுப்பாடு வந்திடக்கூடாது எண்டு கும்பிடவேண்டி இருக்கும்போல கிடக்கு பாருங்கோ. உலகம் போற போக்கு அப்பிடித்தானே இருக்கு கண்டியளோ.

ஆனாலும் பாருங்கோ எங்கட ஆட்களுக்கு அடாவடியா ஏதாவது செய்தால்தான் வாழ்க்கையில சந்தோசம் போல கிடக்கு. ஏனெண்டால்; வெளிநாடுகளில வாழுற எங்கட ஆக்கள் தலைகால் புரியாமல் ஆடுறதை வழமையாகக் கொண்டிருக்கினம் போல கிடக்கு. பல இடங்களில இதை நான் அவதானிச்சுக்கொண்டு வாறன் பாருங்கோ. தாங்கள் செய்யுறது பிழை எண்டு தெரிஞ்சாலும் அதைச் சரியாக்கி வெளிஉலகத்துக்குக் காட்டுற விதம் தமிழ் ஆட்களுக்கு மட்டுமே கைவந்த கலை கண்டியளோ. எத்தனை தரம் அறிவுரை சொன்னாலும் நாங்கள் செய்யுறது மட்டுமே சரி எண்டு நினைச்சுக்கொண்டு நிக்குற ஆட்களை என்ன மருந்துகுடுத்து திருத்துறது எண்டு எனக்கு தெரியேல்லை கண்டியளோ.

என்னவெண்டா பாருங்கோ; புலம்பெயர்ந்து வாழுற பிள்ளைகளுக்கான வரலாறு திரிபுபடுத்தப்பட்ட தமிழ்ப் பாடநூல்களை ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் அறிமுகம் செய்த குழுமம் இன்றுவரைக்கும் ஆயிரம் சாக்குப்போக்குகளைச் சொல்லிக்கொண்டே இருக்கினமே தவிர, அதை இதுவரைக்கும் நீக்கவேயில்லை. தையில நீக்குறம், பங்குனியில நீக்குறம், எண்டதுமில்லாமல், மாவீரர் மேல சத்தியம் செய்து விரைவில நீக்குவம் எண்டு உளறிய பேதிதர்மர்கள் எல்லாம் இப்ப விழாகொண்டாடுறதில வலுசிரத்தையா இருக்கினமே தவிர, புத்தகங்கள் அப்பிடியே தான் இருக்குது பாருங்கோ.

போனமாதம் தமிழ்ப்பிள்ளைகளுக்கு மதிப்பளிக்குறம் எண்ட பெயரிலே, கல்வியைச் சீரழித்த பொறுப்பாளருக்கே விருது குடுத்து கொண்டாடியிருக்கினம். ஏதோ செம்ம.. எண்டு விருது குடுத்தவையாம். மிச்சம் எனக்கு வடிவா விளங்கேல்லை கண்டியளோ. என்னுடைய நண்பர் போய்வந்து நடந்த கூத்துக்களைச் சொன்னார் பாருங்கோ. அது கூத்து இல்லை பாருங்கோ, பிரகண்டம் கண்டியளோ.

பிள்ளையளை மேடையில ஏத்தி, தலையில பட்டதாரி கணக்கில தொப்பி போட்டு வாழ்த்துறதெல்லாம் தேவையான விசயம்தான் பாருங்கோ. ஆனால் அந்தப்பிள்ளைகள் படிக்குற புத்தகம் எதுவெண்டு பாத்தால் அது திரிபுபடுத்தப் பட்ட பாடப்புத்தகம் பாருங்கோ. அதாவது வரலாறு சிதைக்கப்பட்ட பாடப்புத்தகத்தை தாங்களே அறிமுகம் செய்து, அதைப் படிப்பிக்குற ஆசிரியர்களுக்கும், அதைப் படிக்குற பிள்ளைகளுக்கும் தாங்களே கூச்ச நாச்சமில்லாமல் விருது வழங்குற ஆக்கள் எண்டால் அவை எப்பிடிப்பட்டவை எண்டு நீங்களே யோசிச்சுக்கொள்ளுங்கோ. எல்லாம் காசும் வருமானமும் தான் முதல் முக்கியமாக இருக்குது பாருங்கோ. நாட்டுப்பற்று, வீராவேசப் பேச்சுக்கள் எல்லாம் வெறும் மேடை நாடகத்துக்கு மட்டும்தான் கண்டியளோ.

அதிலையும் பெரிய பகிடி எண்ணவேண்டால்; திரிபுபடுத்தப்பட்ட பாடநூலை வெளியிடுறதுக்கு பொறுப்பாக இருந்த தம்பிரான் தான், கல்வியைச் சீரழிக்குற பொறுப்பாளருக்கு செம்மை விருது வழங்கினவராம். திரிபு படுத்தப்பட்ட பாடநூல் பற்றி எல்லாரும் கதைக்கிறார்கள் எண்டு ஓடி ஒளிஞ்சிருந்த நபர், எந்த முகத்தோட மேடையில ஏறி விருது வழங்கினார் எண்டு தெரியேல்லை பாருங்கோ. சாணியடிச்சாலும் பரவாயில்லை, மேடையில ஏறி படம் காட்ட வாய்ப்புக் கிடைச்சால் நாங்கள் காட்டுவம் எண்டு ஏறியிருப்பார் போல கிடக்கு.

கல்வியில் வரலாறு பிழையா இருந்தால், சமுதாயமே பிழையாகக் கட்டமைக்கப்படும் எண்டு சொன்ன அறிஞர்கள் பற்றியெல்லாம் இவங்களுக்கு கவலை இல்லை. உடையவன் இல்லை எண்டால் ஒரு முழம் குறைவு எண்டு சொல்லுறதைப் போல, இப்ப உடையவர்கள் இல்லை எண்டுறது எதிரிகளுக்குப் பயன்படுதோ இல்லை, இவர்களுக்கு நல்லாப் பயன்படுது பாருங்கோ.

திரிபுபடுத்தப்பட்ட பாடநூலை தொடர்ந்தும் வைத்திருக்கும் காரணத்தால் இன்றுமுதல் நீ “திரிபுகளைக் கட்டிக்காக்கும் செம்மையாளன்” என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படுவாய் எண்டு




சொல்லித்தான் விருது குடுத்ததாக அறிஞ்சன் பாருங்கோ. எங்கட இனத்தின்ர இளம் சந்ததியைச் சீரழிக்குறவனுக்கு செம்மை எண்டு விருது குடுத்தால், இனத்தின்ர வரலாறைக் கட்டிக்காப்பாற்றி அதுக்காக உயிரைக்குடுத்தவனுக்கெல்லாம் என்ன விருது கொடுக்குறது எண்டு நீங்களே சிந்தியுங்கோ.

இதில இன்னொரு பெரிய கூத்தும் நடந்துதாம் பாருங்கோ. ஆசிரியர்களுக்கான மதிப்பளிப்பு நடக்கேக்க இராணுவ அணிவகுப்பு நடத்தினராம் வெள்ளைச் சட்டைத் தளபதி. அதாவது, திரிபுபடுத்தப் பட்ட பாடநூல் பற்றி வாய்திறக்காமல், தங்களை எதிர்த்துக் கேள்வி கேளாமல், இதுவரைக்கும் அமைதியா இருந்து படிப்பிக்குற ஆசிரியர்களுக்கான இராணுவ மரியாதை அது. நெத்தியில வலக்கையை வைச்சு சல்யூட் அடிச்சு அவர் வழங்கின இராணுவ மரியாதையில குண்டுகள் பொழியப்படாதது மட்டும்தான் மிச்சம் எண்டா பாருங்கோவன்.

மூதாளர் பேணலகத்துக்கு தேசியத் தலைவர் போய் அங்க இருக்கிற மாவீரரின்ர பெற்றோரை சந்திக்கும் போதுகூட ஒருநாளும் உந்த சல்யூட் அடிக்கிற வேலை செய்யேல்லை. தமிழருக்கேயுரிய முறையில இரண்டு கைகளையும் கூப்பித் தான் அவர் வணக்கம் செலுத்துறவர். ஆனால் இஞ்ச பொறுப்பு எண்ட பெயரில இருக்கிற இந்தக்கோமாளி திரிபுபடுத்தப் பட்ட பாடநூலை கற்பிக்குற ஆசிரியர்களுக்கு இராணுவ மரியாதை வழங்குது எண்டால் இதை எங்க போய்ச் சொல்லி அழுகுறது எண்டு எனக்கு விளங்கேல்லை.

உவர்தான் மாவீரர் மேல சத்தியம் பண்ணி, திரிபுபடுத்தப்பட்ட பாடநூலை இந்த வருசத்துக்குள்ள நீக்குறம் எண்டு போன வருசம் தொடக்கம் போற வாற இடமெல்லாம் சத்தியம் பண்ணிய அரிச்சந்திரன் கண்டியளோ. அரசியல்வாதி கணக்கில அலையுற ஆட்களுக்கு சத்தியம் எல்லாம் ஒரு பொருளே இல்லை கண்டியளோ. மறப்பது மக்கள் இயல்பு எண்டுறது உண்மைதான் பாருங்கோ. அது உவங்களுக்கு தெரியும்.

திரிபுபடுத்தப்பட்ட பாடநூல் வெளிவந்து இப்ப ஒரு வருசம் ஆகப் போகுது பாருங்கோ. அதை நீக்கி நேர்த்தியான பாட நூலை வெளியிடுறதுக்கான எந்த விடயமும் மேற்கொள்ளப்படேல்லை கண்டியளோ. அதை மக்கள் மறக்கும் விதமான செயற்பாடுகளைத்தான் உவை பாஞ்சு பாஞ்சு செய்யினம். விருதுகள், மேடை மதிப்பளிப்புகள் இராணுவ அணிவகுப்பு மரியாதைகளில சிக்கி மயங்கி நிக்குற மக்கள் தங்கட இனத்தின்ர எதிர்காலத்தை அழிக்கிறம் எண்ட எண்ணம் கொஞ்சம் கூட இல்லாமல் திரியினம்.

காலம் எல்லாருக்கும் ஒரு சந்தர்ப்பம் தான் வழங்கும் பாருங்கோ. நாங்கள் செய்யுறது எல்லாம் சரி எண்டு தன்முறைப்பு வெறியில திரியுற ஆட்களுக்கு தங்கட மாபெரும் தவறுகள் கண்ணுக்குத் தெரியுறேல்லை. அது தெரியவந்தாலும் அவர்கள் அதை பற்றி கவலைப்படப் போறதில்லை கண்டியளோ. மக்கள் திருந்தால் எந்த மாற்றமும் வராது. ஏதோ சொல்லுறத்தைச் சொல்லிப்போட்டன் கண்டியளோ.

**“திட்டம் போட்டு திருடுற கூட்டம்**
**திருடிக் கொண்டே இருக்குது..**
**அதை சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம்**
**தடுத்துக் கொண்டே இருக்குது..”**

**- அப்ப வரட்டே**




யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி

# Jasmine Silk House



2022ஆம் ஆண்டின்
புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும்
அனைத்து கவறிங் நகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்



**Fester Str.50, 40882 Ratingen**
**Tel : 021 028 447 44**
**Mob. : 0173 1937 325**

எமது நிறுவனம்  திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்



சிறுகதை

# பூரணி

**சென்ற இதழின் தொடர்ச்சி**

தினமும் தபால்காரனை எதிர் பார்த்து ஏமாந்தாள். அவளும் ஆசா பாசங்களுக்கு அடிமைப்பட்ட சராசரிப் பெண்தானே. அதுவும் போர்ச்சூழல் நிறைந்த தமிழர் பகுதிகளிலிருந்து, புலம் பெயர்ந்தாலே போதுமென்ற ஆதங்கம். ஆனால், ஆச்சியைப் பற்றித்தான் கவலைப்பட்டாள்.

“பட.. பட.. பட..”

பழக்கப்பட்ட அந்த நாராசமான விசிறிகளின் பிரமாண்ட ஓசை, வலுக்கட்டாயமாக சுயநினைவுக்கு இழுத்து வந்தது. மைனாக்களும் அச்சத்தில், கிறீச்சிட்டு பறந்து மறைந்தன. மரங்களிலிருந்த காகக் கூட்டங்களும் அவல ஒலி எழுப்பி, திக்குத்திசை அறியாது கலைந்து பறந்தன. தென்னை மரங்களின் பிற்புலத்திலிருந்து, தென்னோலைகளை சலசலக்க வைத்து தாழப்பறந்து வந்தது ஒரு உலங்கு வானூர்தி. வட்டமடித்தபடி தாழப்பறந்து, மேலெழுந்து மீண்டும் தாழப் பறந்து மறைந்தது. பூரணியின் நெஞ்சு ‘ஹெலி’யைப் போலவே படபடத்தது. ஏதோ அசம்பாவிதம் நடக்கப் போவதாக உள்மனம் எச்சரித்து. அவளையறியது வாய் “முருகா.. முருகா..” எனத்தொழுதது.

“கணேசண்ணை.. வாற.. நேரம்..! சனியனும்.. வருது..!” என முணு முணுத்தாள். மனம் நிலை கொள்ளாமல் பரிதவித்தது. அவள் உள்ளம் போல. சோற்று உலையும் கொதித்தது. களைந்த அரிசியை உலையிலிட்டாள். காய்கறிகளை நறுக்க ஆரம்பித்தபோது, ஹெலியின் கெக்கரிப்பு செவிப்பறையில் மோதியது. தூரத்தே கேட்கும் இடிமுழக்கம் போல, துப்பாக்கி வேட்டுகள் காற்று வாக்கில் கர்ண கடூரமாய் கேட்டன. பூரணிக்குப் பகீர்.. என்றது.. மீண்டும் முருகனை துணைக்கழைதாள்.

“முருகா! கணேசண்ணைக்கு எதுவும் நேந்திரக்கூடாது..”

இரணுவ வாகனத்தின் இறுமல் ஒலியும் காதில் விழுந்தது. சோற்றுலை “கோத.. கோத..” வென பொங்கித் தெறித்தது, அவளது நெஞ்சம் போல. தென்னம்தோப்பின் பரவலில் பார்வையைக் குவித்து ஊடுருவ விட்டாள். ஒவ்வொரு தென்னையையும் தட்டாங்கோடு மறிப்பது போல், ஒரு உருவம் ஓடிவருவது மங்கலாய் தெரிந்தது.

“முருகா.. அது கணேசன் அண்ணையாய் இருக்கக்கூடாது..”

உள்மனம் பரிதவித்து ஓலமிட்டது. முருகன் பூரணிக்கு துணை நிற்கவில்லை. இப்போது துல்லியமாய் தெரிந்தது, அது அச்சு அசலாய் கணேசனேதான். அவளது சர்வாங்கமும் சிலிர்த்து சில்லிட்டன. அவளை அவன் அண்மித்தும்விட்டான்

“என்ன.. அண்ணை.. நடந்தது..?” பதற்றத்துடன் கேட்டாள்.

“தங்கச்சி..! ஆமி.. துரத்தி வாறங்க.. நீ வீட்டுக்குள்ள ஓடு.. நான் கண்ணாக் காட்டுக்குள்ள ஓடி ஒளியிறன்..!” மேல் மூச்சு கீழ் மூச்சுவாங்க சொல்லிக்கொண்டே ஓட அடியெடுத்தான்.

பூரணிக்கு என்ன சொல்வதென்றும், செய்வதென்றும் புரியாது திகைத்தாள். அதே

நேரம் கணேசன் ஓடி ஒளிய இருந்த பக்கமிருந்து ஹெலி மீண்டும் இராட்சசத் தும்பி போல வரத்தொடங்கியது.

மதிய சூரிய ஒளி ஹெலியில் பட்டு ஒளியை தெறித்தது. கணேசனுக்கு ஓடி ஒளிய அவகாச மில்லை. பெரியில் சிக்கிய புலியின் நிலை.. என்ன செய்வதென்று திகைத்து கணேசன் நின்றான்.

"முருகா.. அவனுக்கு எதுவும் நடக்கக்கூடாது.. பத்தாண்டு போராட்டப் பாதையில் ஏற்படாத பயங்கரச் சூழல்..! அவனை இழந்தால் ஒரு பட்டாளத்தை இழந்ததுக்கு ஒப்பு..!. பலவருடப் பின்னடைவு..! அவன் தமிழருக்கு வேண்டும், தமிழரின் சொத்து.. அதற்கும் மேல..!!"

பூரணி; அவனைவிட வேகமாய் முடிவெடுத்தாள். தீக்கமான முடிவுடன் கணேசனின் கையா பற்றி முழுப்பலத்துடன் மூர்க்கமாய் இழுத்தாள்.

"அண்ணை.. உங்களை கும்பிடுறன்..! நான் சொல்லுறதை கேளுங்கோ. உங்களுக்கு ஒன்றும் நடக்கக்கூடாது. மறுக்காம வீட்டுக்குள்ள வாங்க சொல்லுறன். இதுக்குள்ள ஒளியுங்க..! மற்றத நான் பார்த்து கொள்ளுறன்.." என்றதுடன் நில்லாமல் அவனை ஒரு ஆணின் பலத்துடன், தர.. தர.. என இழுத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

நெல்லை சொரியலாய் கொட்டுவதற்காக எப்போதோ அமைக்கப்பட்ட பழங்கால மரப் பெட்டிக்குள் அவனைப் படுக்கவைத்தாள். கைக்கு அகப்பட்ட பழைய, புதிய துணிமணிகளை அவன் மேல் குவித்து நிரப்பி மூடினாள். கணேசன் வாய் திறக்க அவள் இடமே கொடுக்கவில்லை. அறைக் கதவை சாத்தியவளுக்கு, அடுத்து என்ன செய்வதென்று சிந்தையில் பெரிதட்டியதும், கதவைப் பரக்கத் திறந்துவிட்டாள். 'ஆமி' சந்தேகப்பட அதில் சாத்தியக்குறைவு இருப்பதாக முடிவெடுத்தாள்.

வெளியே வந்தபோது, கணேசன் வந்த திசையிலிருந்து நாலைந்து இராணுவத்தினர் பூரணியின் வீட்டை நோக்கி, வெருண்டோடும் முயலை வேட்டையாடத் துடிக்கும் வேட்டை நாய்கள் போல பாய்ந்து வருவது தெரிந்தது.

"இனியும் தாமதிக்கக்கூடாது..!" பூரணியின் மனம் பதகளித்து, தன்னைத் திடப்படுத்திக்கொண்டு செயலில் இறங்கினாள். காலையில் ஆச்சி, நெல்லை அவித்த, வீட்டு வாசலில் அணைக்காமல் விட்டிருந்த அடுப்பு இன்னும் அணையாமல், தணலுடன் தக தகத்துக் கொண்டிருந்தது. பிறகு வறுத்து தூள் இடிக்கலாமென்று, வெயிலில் காய்ந்து கொண்டிருந்த, கிழித்த செத்தல் மிளகாயைப் பார்த்ததும், திடீரென ஒரு யோசனை வெளித்தது.

நெல் அவித்த தாச்சிச் சட்டியை அடுப்பில் தூக்கி வைத்து நெருப்பை சுடர்விட எரிய விட்டாள். காய்ந்துகொண்டிருந்த செத்தல் மிளகாயை, சட்டியில் கொட்டினாள். காய்ந்த மிளகாய் சடுதியாக கருகி வெடித்து, புகையை கக்கியது. அதன் காரம், பூரணியின் நாசியில் நேரே தாக்கியது. கண்கள் எரிவெடுக்க, நுரையீரல் ஆற்றாமையில் ஆக்ரோசமாய் இடைவிடாது இருமியது.

அதைத்தான் பூரணியும் எதிர்பார்த்தாள். இராணுவம் அண்மையில் நெருங்கியதும், சில மிளகாய்களை அடுப்புத் தணலில் போட்டு எரியவிட்டாள். புகை மண்டலம், அவளைச் சுற்றிச் சூழ்ந்தது. அடக்கமுடியாத இருமலில் தொடர்ந்து இருமினாள்.

மிளகாய் நெடி, அருகே வந்த இராணுவத்தையும் தாக்கியது. அவர்களும் இருமத்தொடங்கினர். இருமலினூடே ஒருவன் கேட்டான், "நங்கி..! இந்தப் பக்கமாய் ஒரு கொட்டியா வந்தானா?" அவளும் தலையைப் பலமாய் ஆட்டிக் கையை விரித்தாள். தொடர்ந்த இருமல் மேற்கொண்டு எதுவும் பேசவிடவில்லை.

அவர்களையும் மிளகாய் நெடி விரட்ட, இருமிக்கொண்டே ஓடி மறைந்தனர். மிளகாய் நெடி வீட்டினுள்ளும் நுழைந்து, கணேசனையும் இருமவைத்து பயமுறுத்தியது. பூரணி வெற்றிப் புன்னகையுடன் கணேசனை வெளியே வரச்சொன்னாள். அவனுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. பூரணியின் சமயோசிதம் அவனைப் புல்லரிக்க வைத்தது.

**முற்றும்**



பூமிபுத்திரன்

# மூன்றாம் உலகப் போருக்கு திட்டமிடுகிறதா அமெரிக்கா

அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் அரசுத் தலைவராக ஜோ பைடன் வெற்றிபெற்ற தருணத்தில், ஊடகங்களில் வெளியிடப்பட்ட எதிர்வு கூறல்களுள் ஒன்று, எதிர்காலத்தில் அதிக போர்களை அமெரிக்கா நடத்தும் என்பதாக இருந்தது. ஆனால், யாரும் எதிர்பார்க்காத வகையில் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்ற பாணியில் வெளியேறிய போது, போரை ஆதரிக்கும் பெரு முதலாளிகளும், எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றும் ஊடகங்களும் வாடித்தான் போய் விட்டன.


துவண்டு போயிருந்த அவர்களின் நெஞ்சங்களில் பால் வார்ப்பதற்கு ஒப்பாக, உக்ரைன் போர் அவர்களுக்குப் புதிய தெம்பை அளித்துள்ளதைப் பார்க்க முடிகின்றது. கிட்டத்தட்ட பூச்சியத்தை எட்டியிருந்த ஆயுதச் சந்தையில், வியாபாரம் பெருமளவில் நடைபெற்று வரும் நிலையில், போர் தொடர்பான செய்திகளையும், ஊகங்களையும் வெளியிட்டு, தங்கள் பங்கிற்கு பிரச்சனையை ஊதிப் பெருப்பிக்கும் வேலையில் மேற்குலக சார்பு ஊடகங்கள் ஓய்வு ஒழிச்சலின்றிச் செயற்படுவதையும் பார்க்க முடிகின்றது.


'தற்காப்புக்காகவே' தான் போரில் ஈடுபடுவதாகச் சொல்லிக் கொண்டு, உக்ரைனில் படை நடவடிக்கைகளை ஆரம்பித்த ரஸ்யா, தனது இலக்குகளை எட்டிவிட்டதாக அறிவித்ததன் பின்னரும், இரண்டு மாதங்களையும் கடந்து போர் தொடர்கிறது. போர் இரண்டு தரப்புப் படையினருக்கு இடையே நடைபெறும் ஒன்றாக இருந்த போதிலும், பொதுமக்களே அதிகம் பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை. பொதுமக்கள் கொல்லப்படுவதும், காயங்களுக்கு இலக்காவதும், தமது சொத்து சுகங்களைத் துறந்து, அகதிகளாக வெளியேறுவதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்தத் துயரம் இன்னமும் தொடர்வதற்கான வாய்ப்புகளே அதிகமாக உள்ளதைப் பார்க்க முடிகின்றது.

போரை நடத்திய வண்ணம் பேச்சு வார்த்தைகளுக்கும் வாய்ப்பை வழங்கிய ரஸ்யா, 'தனது கோரிக்கைகளை உக்ரைன் ஏற்றுக் கொண்டால், போரை நிறுத்தத் தயார்' என்றும் அறிவித்திருந்தது. இறுதியாக துருக்கிய நகரான இஸ்தான்புல்லில் இரண்டு நாட்டு இராஜதந்திரிகளும் சந்தித்துப் பேசிய போது, ரஸ்யா முன்வைத்த நிபந்தனைகளைக் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளும், எழுத்து மூல ஆவணமொன்றை உக்ரைன் கையளித்திருந்தது. இந்தச் செய்தி வெளியான மறுகணமே போரின் போக்கில் மாற்றம் தென்படத் தொடங்கி விட்டது. பேச்சுவார்த்தை நடைபெற்ற மறுநாள் உக்ரைன் போர் ஆரம்பமானதன் பின்னான காலகட்டத்தில், முதல் தடவையாக ரஸ்ய மண்ணில் உக்ரைன் படைகள் முதலாவது தாக்குதலை நடத்தின.

உக்ரைனை ஆதரிக்கும் சக்திகள், குறிப்பாக மேற்குலகின் குவிமய்யமாக உள்ள அமெரிக்கா, இந்தப் போர் விரைவில் முடிவுக்கு வருவதை விரும்ப மாட்டாது







எனப் பல ஆய்வாளர்கள் கூறியிருந்தனர். அது மாத்திரமன்றி, தீவிர வலதுசாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ள உக்ரைன் இராணுவமும் இந்தப் போரை முடித்து வைக்கச் சம்மதிக்கப் போவதில்லை எனவும், அவர்கள் தெரிவித்து இருந்தனர். இத்தகைய எதிர்வுக் கூறல்களை மெய்ப்பிக்கும் வகையிலான காரியங்களே தொடர்ந்து அரங்கேறி வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

பேச்சுவார்த்தை தொடர்பான செய்திகள் மழுங்கடிக்கப்பட்டு, யுத்த வெற்றிச் செய்திகளுக்கே அதிக முக்கியத்துவம் தரப்படுவதைப் பார்க்கக் கூடியதாக உள்ள அதேவேளை, அமெரிக்க முகாமில் இருந்து உக்ரைனுக்கு வழங்கப்படும் ஆயுத உதவிகள் பல மடங்கு அதிகரிக்கப்பட்டு உள்ளதையும் காண முடிகின்றது. 55 இலட்சம் மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ள நிலையிலும், 1,300க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ள நிலையிலும், பல பில்லியன் ஈரோ பெறுமதியான பொது மற்றும் தனியார் சொத்துகள் சேதமாக்கப்பட்டுள்ள நிலையிலும், போரை நிறுத்துவதற்கான முயற்சியில் இறங்காமல், போரைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தேவையான ஆயுதங்களையும், படைத்துறைத் தகவல்களையும் வழங்கிக் கொண்டிருக்கும் மேற்குலக நாடுகளை, உக்ரைனின் 'நட்பு நாடுகள்' என எவ்வாறு கருத முடியும்?

ஆனால், உக்ரைன் அரசுத் தலைமை, அத்தகைய நாடுகளை 'நட்பு நாடுகளாகக்' கருதுகின்றது. அந்த நாடுகளின் சொல் கேட்டு நடக்கின்றது. அரசுத் தலைவர் ஷெலன்ஸ்கியோ தினசரி அறிக்கைகளை விடுக்கிறார். பன்னாட்டு ஊடகங்களும் அவரது அறிக்கைக்கு முக்கியத்துவம் தந்து வெளியிடுகின்றன. அவரும் ரஸ்யாவையும், அதன் நட்பு நாடுகளையும் சகட்டு மேனிக்கு விமர்சித்து வருகின்றார்.

மறுபுறம், யுத்தத்துக்கு எதிரான கருத்தைக் கொண்டவர்களும், மானுடத்தை நேசிப்பவர்களும் போரை நிறுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கைக்கு மேல் கோரிக்கை வைத்து வருகின்றனர். அது மாத்திரமன்றி, போரின் நீட்சி மூன்றாம் உலகப் போருக்கு வித்திடும். அதன்போது நிகழும் அணுவாயுதத் தாக்குதல் காரணமாக உலகமே அழியும் நிலை உருவாகலாம் எனவும் எச்சரிக்கை செய்து வருகின்றனர். ஆனால், அவர்களின் குரல்கள் மேற்குலகின் காதுகளை எட்டுவதாக இல்லை. அமெரிக்காவின் நடவடிக்கைகளோ எரியும் நெருப்பில் எண்ணை ஊற்றுவதற்கு ஒப்பாக உள்ளன.

33 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுத உதவிகளை உக்ரைனுக்கு வழங்கும் அறிவிப்பை விடுத்துள்ள அமெரிக்க அரசுத் தலைமை, தனது நாட்டின் சபாநாயகரான நான்சி பெலோசியை உக்ரைனுக்கு அனுப்பி வைத்துள்ளது. போரில் அதீத நாட்டம் கொண்ட பெண்மணியான பெலோசி, அமெரிக்க அரசுத் தலைமையில் மூன்றாவது நிலையில் உள்ளவர் என்பது கவனத்தில் கொள்ளத்தக்க விடயம். தலைநகர் கீவ்வில் அரசுத் தலைவர் ஷெலன்ஸ்கியைச் சந்தித்துப் பேசிய அவர், "உக்ரைன் வெற்றிபெறும் வரை அமெரிக்கா துணையிருக்கும்" எனத் தெரிவித்துள்ளார். அவரது கூற்றின் உண்மையான அர்த்தம் உக்ரைன் விவகாரத்துக்கு அமைதிப் பேச்சுக்கள் மூலம் தீர்வு எட்டப்படாது, அவ்வாறு தீர்வு எட்டப்படவும் கூடாது என்பதே!.

இதே கருத்தை அமெரிக்காவில் உள்ள பல அரசியல்வாதிகளும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளனர். அமெரிக்கப் படைகளை உக்ரைனுக்கு அனுப்பி வைக்க வேண்டும், அணுவாயுதங்களை உக்ரைனில் நிலைகொள்ளச் செய்ய வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளும் எழும்பத் தொடங்கியுள்ளன. இந்த இரண்டு விடயங்களுள் எந்தவொன்று நடைபெற்றாலும், அது முழு உலகிற்கும் அழிவைத் தேடித்தரும் ஒன்றாக மாறக்கூடும் என்பதை இத்தகையக் கருத்தை முன்வைக்கும் அனைவருமே அறிவர். இருந்தும் அவர்கள் இத்தகைய கோரிக்கைகளைத் தொடர்ந்தும் முன்வைப்பதன் நோக்கம் மூன்றாம் உலகப் போரையும், மானுட குலத்தின் ஒட்டுமொத்த அழிவையும் காண்பதா? எனக் கேட்கத் தோன்றுகிறது.

Smt. வித்யா மயூரன், சுவிஸ்

# குருவிடம் சேரும் முறை

> குறுமுகம் திருமுகமும் ஒன்றிடினே
> அருள் முகம் கட்டும்
> ஆகாதனவெல்லாமாகும்

ஒரு கலாசாரத்தின் அடிப்படையில் நுண்கலைகளும், அதனைக் கையாளும் முறைகளும் அமைந்திருகின்றன. கலைகளைப் பயில்பவர்கள் ஒரு குருவிடம் சேரும்போது, சில பழக்கவழக்கங்களுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும்.

முதலில் உங்களுக்குப் பிடித்த ஒரு நல்ல ஆசிரியரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின் பயிலத் தொடங்க நல்ல நாளும், வேளையும் நிச்சயிக்கப்பட வேண்டும்.

வகுப்பு தொடங்கும் முன் வெற்றிலை, பாக்கு, பழங்கள், தேங்காய், வஸ்திரம், மலர்கள், குருகாணிக்கை போன்ற பொருட்களைக் குருவிற்கு அன்புடனும், பணிவுடனும் ஒரு தட்டில் வைத்து, இரு கைகளாலும் சமர்ப்பித்து, அவர் பாதங்களை வணங்கி, அவரிடம் ஆசி பெற வேண்டும். பின் தட்டிக் கும்பிட கற்றுத்தருவர். அதன் பெயர் நமஸ்காரம். அதைச் செய்துவிட்டு குருவையும் தட்டுகழியையும் வணங்க வேண்டும். சாதாரணமாக நடன வகுப்பறையில் ஆசிரியர் தட்டுக்கழி பாவிப்பது வழக்கம். அதுவே மேடைகளில் நகழ்ச்சிகளில் நட்டிடு வாங்கத்தாளம் பாவிக்கப்படும்.



## நமஸ்காரம்

நமஸ்காரம் நாட்டியம் ஆடுவதற்கு முன்னரும், நாட்டியம் ஆடியப் பின்னரும் செய்யப்பதுவது நமஸ்காரம் ஆகும். இந்தப் பழக்கம் மிகப் பழமை வாய்ந்ததாகும். இதைத் தட்டி கும்பிடுதல் என்றும் சொல்லலாம். இது இரு வகைப்படும்; 1.சின்ன நமஸ்காரம், 2.பெரிய நமஸ்காரம். சின்ன நமஸ்காரம் நாட்டிய வகுப்பின் பயிற்சியின் போது செய்வது ஆகும். அதுவே பெரிய நமஸ்காரம் நாட்டியக் கச்சேரியின்போது செய்யப்படுவதாகும்.

நாட்டியம் செய்யும் போது, ஒருவர் முரசு அடிப்பவர் போல் இருக்கிறார். அவரது பாதங்கள் சுழிகளாகவும், பூமி முரசாகவும் மாறுகின்றது. பூமாதேவியே என் பாதங்களால் உன்னை அடிப்பதால் நீ பொறுத்தருள வேண்டும் என்றும், குருவிற்கும், அஷ்டதிக்கு பாலகர்களுக்கும், சபையோருக்கும் வணக்கம் செலுத்துவதாக அமைகிறது நமஸ்காரம். நாம் ஆடும் நாட்டியம் இறைவனுக்குச் செலுத்தும் ஒருவகை காணிக்கை.

## நமஸ்காரம் செய்யும் முறை


மார்புக்கு முன் இரு கைகளையும் கடகாமுகம் பிடித்து, கால்களைத் தட்டி, பின் சிகரம் முத்திரைப் பிடித்து, சுற்றி வந்து, சதுர முத்திரையினால் முழு மண்டியில் இருந்து நிலத்தைத் தொட்டு, கண்களில் ஒற்றி, இறுதியாக அஞ்சலி ஹஸ்தம் மார்பின் முன் பிடித்து, எழுந்து நிற்க வேண்டும்.

**“குரு பிரம்மா; குரு விஷ்ணு; குரு தேவோ மகேஸ்வரா..”** என்று சொல்லப்படுகிறது. அதாவது, மற்ற தெய்வங்களைவிட, குருவுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது.


**அடவு மற்றும் ஹஸ்தம் பற்றி பார்ப்போம்.**



கடகாமுகம்



சிகரம் முத்திரை



சதுர முத்திரை



அஞ்சலி ஹஸ்தம்

# Jaffna Stores

Geschäftsführer : Herr Thayaharan Nadarajah

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

## மண்மணம் மாறாத சுவைதரும்
## தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்

ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்




www.jaffnastores.com
info@jaffnastores.de

Tel. - 0521 174794
Mobile - 01732807906

Feilenstraße 8
33602 Bielefeld



அன்புச் செல்வன்

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?



இதற்கான பதிலை இன்றைய இலங்கையின் சிங்களத் தெலுங்கர்களின் 76 வருட கால அரசுகள் நடத்திய ஆட்சிகளின் சாதனைகளை, அதே இலங்கையின் சிங்கள மக்கள் இன்று உலகறியச் செய்து வருகின்றனர்.

பொன்னும், மணியும் உலகுக்கே கொட்டிக் கொடுத்த இந்து மகா சமுத்திரத்தின் முத்து எனப் போற்றப் பட்ட எங்களின் தாய்த் தமிழ் ஈழம், தமிழ் முஸ்லிம் மக்களின் மயான பூமியாக்கிய சாதனையை ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலேயே இதே தெலுங்குச் சிங்களவர்கள் 1910ல் நடத்திக் காட்டிவிட்டனர்.


கொலை, கொள்ளை, அமைதியைக் கெடுத்த குற்றங்களுக்காகப் பிரித்தானிய அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட அதே தெலுங்குச் சிங்களவர்களிடமே தமிழர்களின் எதிர்ப்புகளையும் மீறி, அன்றைய பிரித்தானிய அரசு நாட்டை அந்த குற்றவாளிகளிடம் ஒப்படைத்துச் சென்றதன் பலாபலன், இன்று உலகப் பயங்கரவாதங்கள் நிறைந்த தேசமாகக் காட்சி அளிக்கிறது.

இதற்கான முழுப் பொறுப்பையும் அன்றைய பிரித்தானியப் பிரதமர் அற்லியும், அரசரான 6வது ஜோர்ஜ் மன்னரும் தட்டிக் கழித்து விட்டு, சும்மா போக எம்மால் விட முடியாது. அந்த அளவுக்கு தமிழ் மக்கள் கண்ணீரும், இரத்தமும், வேர்வையும், உழைப்பையும், உயிர்களையும் கடந்த 120 வருடங்களாகப் பறிகொடுத்து, 2009இல் தமிழ் இன அழிப்பில் 2 இலட்சம் உயிர்களைச் சிங்களம் கொன்றொழித்தப் பின்னரும், நீதி மறுக்கப் பட்ட இனமாக அதே சிங்களத் தெலுங்கரின் இராணுவத்தால் பூர்வீக நிலங்களும், வளங்களும், அடிப்படை மனித உரிமைகளும் பறிக்கப்பட்ட அடிமைகளாக அவதிப் படுகிறோம்.

இன்று உக்கிரெயின் மக்களை ருஷியாவுக்கு எதிராகப் போராடித் தனி நாடு அமைக்க அனைத்து உதவிகளையும் செய்து, ஒரே இன மக்களைப் பகையூட்டிப் போரிட உதவும் பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு, அவரது முந்தைய அரசுகளும், அரசுப் பிரதமர் அட்லியும், இன்றைய எலிசபெத் மகாராணியாரின் தந்தை யோர்ஜ் மன்னரும் எம் தேசத்துக்கும், மக்களுக்கும் இழைத்த தவறை சரி செய்ய வேண்டிய பொறுப்பு இல்லையா? என எமது அரசியல் செயற்பாட்டாளர்கள் உலக அரசியல் அரங்குகளில் நிற்க வைத்துக் கேட்டால் அல்லாமல் எமக்கான நீதிக் கிடைக்கப் போவதில்லை.

அருகில் உள்ள இந்தியாவுக்கும் தமிழ் ஈழத்தின் மீது எதுவித உரித்தும், உரிமையும் கிடையாது. ஒல்லாந்தரும், பேர்த்துக் கீசரும் தமிழரான எமது மூதாதையருடன் போரிட்டும் உடன்படிக்கைகள் செய்தும், எமது நாட்டை அடிமைப் படுத்தினரர்கள். 1830இல் கடைசித் தமிழ் அரசை வெற்றிக் கொண்ட பிரித்தானிய

அரசு செய்து கொண்ட கண்டிப் பிரகடனத்தைத் தமிழ் அரசனான கண்ணுச்சாமி என்னும் ஸ்ரீ விக்கிரம ராசசிங்கன் கையொப்பம் இட்ட மொழி தமிழ் மொழியே!. அந்த ஆவணத்தைச் சிங்கள அரசு காணாமல் போய் விட்டது எனக் கூறிக் கையெழுத்தை மாற்றி வரலாற்றை எழுதி வைத்திருக்கிறது.




படம் மூன்று: ஒல்லாந்தர் கால ஆட்சி மாவட்டங்கள்

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மூன்று ஆட்சி மாவட்டங்களும் தமிழர் நிலப்பகுதிகளாகக் கருதப்பட்டு ஒரே நிர்வாக மாவட்டமாக நிர்வகிக்கப்பட்டது. தே. டியு. பெரோனின் படத்தைத் தழுவிப் பேராசிரியர் நடராஜா வரைந்த படத்தின் தழுவல்.

அப்படியிருந்தும் தமிழர்களின் ஆட்சி அதிகாரங்களில் இருந்த தமிழர் நிலங்களை எல்லாம், ஒற்றை ஆட்சி முறையில் தமிழர்களின் விருப்பத்தைப் பெறாமலே, சிங்களவர்களின் ஆதிக்கத்தில் இருந்த கோட்டை உரோகண அரசுகளுடன் இணைத்து, சிங்களப் பகுதிகளுடன் இணைத்தும், சிங்கள மக்களைத் தமிழர் நிலங்களில் குடியமர்த்தியும், பூர்வத் தமிழக் குடிகளை விரட்டி வெளியேற்றியும், முழுத் தேசத்தையும் சிங்கள மையப்படுத்தி, புத்த விகாரைகளையும் கட்டி, கலாச்சாரப் பண்பாட்டு அழிப்புகள் மூலம் தமிழ் இன அழிப்பைச் செய்ய உதவியதும் பிரித்தானிய ஆட்சியாளர்களே!.

இத்தனை குற்றங்களையும் சிங்கள ஆட்சியாளர்கள், தமிழ் மக்கள் மீது இழைத்து விட்டுத் தண்டனை ஏதும் இல்லாமல் தப்பித்துப் போக, ஒரு இனமாக நாம் அனுமதிக்க முடியுமா? எமது பூர்வீகத் தாயகத்தின் நில வரைப்படம் ஒன்றை இங்கே பார்க்கலாம். இந்த அளவுக்கு வரலாற்று ரீதியாக தனி நாட்டை கொண்டிருந்த தமிழ் இனம், இன்று நாடற்ற, வீடற்ற, ஊரற்ற மக்களாகப் பிற இனத்தவரின் தயவில் வாழும் அடிமைகளாக வாழும் நிலையை ஏற்க வேண்டிய தேவையோ, கட்டாயமோ என்ன? இந்த உண்மையை எம் இனம் உலகறிய உரக்கப் பேசி, சர்வதேச சட்ட விதிகளின் அடிப்படையில், எமது தாயக மீட்புப் போராட்டத்தைத் தொடர வேண்டும்.

இலங்கையில் தமிழருக்கு எதிராகக் கடந்த 100 வருடங்களுக்கும் அதிகமாக இழைக்கப்பட்ட கொடுமைகளும், இன்று நாட்டை ஆளும் தகுதியை அறவே இழந்து விட்ட நிலைக்கு இராஜ பக்ஷேக்களை மட்டும் காரணம் எனக் குறுக்கி, எமது தரப்பு நியாயத்தை நீர்த்துப் போக விட்டு விட முடியாது.

எனவே, நாம் எதற்காக இந்தியா, அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளிடம் கை ஏந்திப் பிச்சையாக சுதந்திரத்தைக் கேட்க வேண்டும்? புரட்சிக் கவிஞர் பாராதிதாசன் வரிகளில் சொன்னால் 'சுதந்திரம் என்ன சுக்கா, மிளகா கடையில் வாங்க?' என்பதற்கு இணங்க, எமது விடுதலைப் போராட்டத்தைத் தொடர்வதே சிறந்தது.

**(தேடல் தொடரும்)**



# Radio - by - Phone

18 ஆம்

ஆண்டில்....

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

# 00 4934 5483411998

தொலைபேசி இலக்கத்தில்

## ஐரோப்பியத் தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
**00 49 231 700 977 60**

மேலதீக விபரங்களுக்கு...

**www.etr.fm**

மகிழ்வுடன்.... அகரம் | அகர தீபம் | ETR NEWS | ETR Music



இரத்தினம் தயாபரன்,
சிரேஸ்ட ஊடகவியலாளர்

# நனைந்த கள்ளனும் நக்கின கள்ளனும்

## யாருக்கு என்ன நன்மை ?

ஒருவாறாக ஜனாதிபதி தேர்தலில் தன்னை வேட்பாளரான சஜித் நிலைநிறுத்திக் கொண்ட காலமது. கடைசி வரை நிலறைவேறாத தனது ஜனாதிபதி கனவுடன் சஜித் தேர்தலில் போட்டியிட ரணில் அனுமதித்திருந்தார். சஜித் தேர்தல் கோத்தபாயவை வெற்றி பெற, தமிழ் மக்களது வாக்குகளை பெறவேண்டுமென்ற கட்டாயத்தின் மத்தியில் ரணில் பிரச்சாரத்திற்காக யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார்.

தமிழ் மக்களது வாக்குகளை பெறும் வகையில் பிரச்சாரங்களை முன்னெடுப்பது தொடர்பில் உரையாட விரும்புவதாக கொழும்பு ஊடக வட்டாரங்களின் ஊடாக கோரிக்கை முன்வைக்கப்பட்டு நேரமும் ஒதுக்கப்பட்டிருந்தது. தமிழ் மக்களை பொறுத்த வரையில் கோத்தபாய ஜனாதிபதியாக வந்துவிடக் கூடாதென்ற நிலைப்பாடே மேலோங்கியிருந்த நிலையில், ஊடகப்பிரச்சாரங்கள் தொடர்பில் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக ரணில் தனது ஊடக செயலாளர் சகிதம் பேசிக் கொண்டிருந்தார்.

நானும் நேரம் ஒதுக்கி, எவ்வாறான சமூக ஊடக பிரச்சாரங்களை, எவ்வாறு முன்னிறுத்தி மக்களை அதிலும் பொது ஜனபெரமுன தரப்புடன் இணைந்துள்ள 2009 பின்னரான சில்வண்டு இளைஞர்களைக் கவனத்தை ஈர்ப்பது பற்றி விளக்கியிருந்தேன். அனைத்தையும் பொறுமையான கேட்டறிந்து, தனது ஊடக செயலாளரையும் குறிப்பெடுக்க சொன்ன ரணில், இறுதியாக சொன்னதனை கேட்டு நான் அதிர்ந்து போனேன். நீங்கள் சொன்ன ஐடியாக்கள் சிறப்பானவை. நிச்சயமாக எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் இவற்றை பிரயோகித்து, ஐக்கிய தேசியக் கட்சியை வெல்ல வைக்க முடியுமென்றார் நம்பிக்கையுடன்.

ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்களிற்கு வருகை தந்து, நாடாளுமன்ற தேர்தல் பற்றி சிந்திக்க முடிந்தவொரு அரசியல்வாதி ரணில் மட்டுமே!. நிச்சியமாக அவரது எந்தவொரு நகர்வும் சஜித் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவதாக இருந்திருக்கவில்லையென்பது அப்பட்டமாக தெரிந்த போது அதிர்ந்தே போனேன். தேசத்தின் புயல் ஊடக சந்திப்புகளில் அடிக்கடி சொல்லும் ரணில் ஒரு நரியன் என்ற பொன்மொழிகள் நினைவைத் தட்டிச்சென்றன.

ரணில் விக்கிரமசிங்கவின் முக்காலத்து அரசியல் அணுகுமுறையைப் புரிந்து கொள்வதன் ஊடாகவே தற்போதைய அவரது பிரதமர்

பதவியேற்பு பற்றிய ஆழ, அகலங்களைக் கண்டறிய முடியும். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தில் அனைத்தையும் தங்கு தடையின்றி அனுப்புமாறு அரச நிர்வாகத்திற்கும், அதனை தடுக்க வேண்டாம் என பாதுகாப்பு தரப்பிற்கும் ரணில் உத்தரவிட்டமை சொல்லி தெரிய வேண்டியதில்லை.

அதனால் சமாதான காலத்தில் கொழும்பில் புழக்கத்தில் இருந்த அனைத்து விதமான ஆடம்பர, சொகுசு பொருட்களும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தாராளமாக புழக்கத்தில் இருந்தன. சமாதான பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட புலிகள் தரப்பு பிரதிநிதிகளுக்கு, அரசாங்க பிரதிநிதிகளுக்கு ஈடாக நட்சத்திர விடுதிகளும், போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

புலிகளின் சமாதான பேச்சுவார்த்தை குழுவினருக்கு இராஜதந்திர அந்தஸ்த்திலான கடவுச்சீட்டுக்கு உரியவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் வழங்கப்பட்டன. விளைவாக கிளிநொச்சியில் மாடி வீடு கட்டுவதிலும், மார்பிள் பதிப்பதிலும் தளபதிகள் முதல், பொறுப்பாளர்கள் வரை முட்டிமோதிய கதை பெருங்கதை. கருணா அம்மன் தனித்து கிழக்குடன் போனதன் மையக்கதை அமெரிக்காவால் எழுதப்பட்டு ரணில் விக்கிரம சிங்கவினால் அரங்கேற்றப்பட்டமையும் இரகசியமானதல்ல.

பேச்சுவார்த்தைக் கால ரணில் அணுகுமுறை புலிகளின் போராட்ட வீரியத்திலும், கட்டுக்கோப்பிலும் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியது என்பது சொல்லி தெரியவேண்டியதொன்றல்ல. அதே போன்று நல்லாட்சி காலத்து பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மாவீரர் தின நினைவேந்தல்களுக்கு தடைவிதிக்காது ஒருவித மறைமுக கட்டப்பாடுகளுடன் அதனை அனுமதித்திருந்தார். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்களுக்கும் அனுமதித்தார். ஜனநாயக பூர்வமான போராட்டங்கள், பேரணிகளை தடுக்கவோ இடையூறு ஏற்படுத்தவோ வேண்டாமென படையினரைக் கேட்டுக் கொண்டார். புலம்பெயர் அமைப்புகள், செயற்பாட்டாளர்களை இலங்கைக்குள் அனுமதித்ததோடு, முதலீடுகளையும் கண்டுகொள்ளாது விட்டார்.

இந்த அணுமுறையினால் 2015 - 2019 காலப்பகுதியில் தமிழ்த்தேசிய அலையும், தமிழீழக் கோரிக்கையும், விளக்கேற்றும் அனுமதியுடன் அடங்கிவிட ரணிலால் மட்டுமே முடிந்தது. ஆனாலும், வரலாறுக்களது ஒட்டத்தில் 2020 ரணிலிற்கு இருண்டதொரு காலத்தையே வழங்கியது. ஒற்றை ஆசனத்தைக் கூட பெற்றுக் கொள்ளாது, போனஸ் ஆசனத்திற்குதான் செல்வதா? அல்லது மருமகன் ரஞ்சவீனை அனுப்புதா? என ரணிலை காத்திருக்க வைத்தது. ஆனாலும் மழைக்கு பற்றைக்குள் காத்திருந்து வெளியே வந்த நரி, தனது ஒற்றை ஆசனத்தை வைத்து பிரதமர் கதிரையைக் கைப்பற்றி மீண்டும் பேசு பொருளாகியிருக்கின்றது.

கோட்டா கோ கம - நோ டீல் கோகம கால இடைக்காலப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கோட்டா கோ கம போராட்டத்தை குழப்பினால் பிரதமராக பொறுப்பேற்க போவதில்லை என்ற நிபந்தனையை விதித்துள்ளார். இதனூடாக ஜனாதிபதியின் கதிரைக்கு மேலே கத்தியொன்றை தொங்கவிட்டுள்ளார்.

மறுபுறம் நீங்கள் போராடும் வரை, அல்லது சோர்ந்து போகும் வரை, அல்லது நீங்களாக எழுந்து செல்லும் வரை போராடலாம் என்ற செய்தியை போராட்டக் காரர்களுக்கு சொல்லி இருக்கிறார். கோட்டா கோ கமவின் மீது சிறு கீறலும் விழமாட்டாது என உறுதியளித்துள்ளார். கோட்டா கோ கம பக்கம் பொலிஸார் தலை வைத்துப் படுக்கவும் மாட்டார்கள் எனக் கூறியுள்ளார். மக்களின் இளைஞர்களின் எந்தப் போராட்டமும் நசுக்கப்பட மாட்டாது என தெரிவித்துள்ளார்.

உண்மையில் போராட்டகாரர்களால் வெளியேற்றப்பட்ட ராஜபக்ச சாம்ராஜ்ஜியத்தை தனது ஒற்றை ஆசனம் மூலம் தனது காலடியில் ரணில் வைத்துள்ளார். காலிமுகத்திடல் போராட்டகாரர்கள் மூலம் கோத்தபாய எழும்பி ஆடமுடியாத சூழலை உருவாக்கியுள்ளார்.

மறுபுறம் வடகிழக்கில் வருடக்கணக்கில் காணாமல் ஆக்கப்பட்ட தாய்மாரது போராட்டத்தை நீடிக்க வைத்து, அதனை பலவீனப்படுத்தி, அதனை கண்டுகொள்ளாது கைவிட செய்தாரோ அதனையே தற்போதும் செய்யப் போகின்றார். கோத்தா மீண்டு எழும்போதெல்லாம் காலிமுகத்திடல் கொதிக்கும். அடங்கி கிடந்தால் காலிமுகத்திடலும் மௌனித்தே கிடக்கும்.

ஏனெனில் ரணிலின் பின்னால் நிற்கும் மேய்ப்பர்களது பின்னணியிலேயே காலிமுகத்திடல் கதைகளும் நடப்பது அண்மை நாட்களாக மௌனித்துள்ள பல செயற்பாட்டாளர்களது சமூக ஊடக பக்கங்கள் சொல்லி நிற்கின்ற நிஜக்கதைகளாகும்.

**DORTMUND மாநகரத்திலே**
**தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும்**
**உணவுப்பொருட்களை மொத்தமாக**
**பெற்றுக்கொள்ள நாடுங்கள்**

StaR-Impex



Rabeena
Aachi
BTM
Double Horse

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

**Lebensmittel Grosshandel e.K.**

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net



MDH Laziza Cock Brand DAAWAT Elephant House Shan Akash Basmati Rubicon Tilda
Nestlé PG tips Niru Aroy-D MTR Aashirvaad Pillsbury Patak's Laila



சண் தவராஜா

# குழப்பமான நிலையில் சிறிலங்கா

சிறிலங்காவில் அரசியல் நிலவரம் தொடர்ந்து கொதி நிலையிலேயே இருந்து வருகின்றது. நாடு ஆர்ப்பாட்டங்களாலும், மக்களின் எழுச்சிப் போராட்டங்களாலும் நிறைந்து கிடக்கின்றது. காவல் துறையினரும், படையினரும் சட்டங்களை மதித்து நடப்பதா? மக்களின் விருப்பங்களுக்கு மதிப்பளிப்பதா? எனத் தெரியாத நிலையில் தவிக்கின்றனர். ஆட்சியாளர்களோ காலத்தை இழுத்தடித்து, மக்கள் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்வதைக் குறியாகக் கொண்டு, காய்களை நகர்த்தி வருகின்றனர்.

மக்களின் அன்றாட வாழ்க்கை கேள்விக்குறியாக உள்ள நிலையில் போராட்டங்கள், கிளர்ச்சிகள் உருவாகின்றமை இயல்பானதே!. ஆட்சியாளர்கள் அவற்றை எவ்வாறு கையாளுகின்றார்கள் என்பதிலேயே, அவற்றின் அடுத்த கட்டப் போக்கு தீர்மானிக்கப்படுகின்றது. ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் என்பவற்றைக் கையாளுவதில் தெற்கும், வடக்கு கிழக்குக்கும் இடையே இரண்டை அணுகுமுறையையே இதுவரை அரசாங்கம் கடைப்பிடித்து வருகின்றமையைப் பார்க்க முடிகின்றது.

இத்தகையப் போக்கு தொடருமா? அல்லது அரசாங்கம் தனது தற்போதைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, வடக்கு கிழக்கில் நடப்பதைப் போன்று, தனது கொடூர முகத்தை வெளிக்காட்டுமா? என்பதை விரைவில் பார்த்துவிட முடியும். அதற்கு அச்சாரம் இடும் வகையிலேயே நாட்டில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதைப் பார்க்க முடிகின்றது. அதேவேளை, தனது அடக்குமுறைகளைக் கைக்கொள்ளத் தேவையான வகையில் ஒரு வாய்ப்பை வழங்காதிருக்கப் போராட்டக்காரர்கள் முயல வேண்டும்.

சிறிலங்காவின் இன்றைய நெருக்கடிக்குப் போர் தொடர்பான செலவினங்களும், தவறான நிதி மேலாண்மையுமே பிரதான காரணங்களாக உள்ள போதிலும், கொள்கை அடிப்படையிலான காரணமாக உள்ளது சிங்களப் பேரினவாதமே!. நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னமேயே தோற்றம் பெற்றுவிட்ட இனவாதமானது, சுதந்திரத்தின் பின்னான காலகட்டத்தில் அரச அங்கீகாரம் பெற்ற கொள்கையாக மாறிவிட்டது. ராஜபக்ச சகோதரர்களின் காலத்தில் அது அதி தீவிரம் பெற்ற ஒன்றாக விளங்கியது.

இந்த இனவாதத்தின் மூலவேராக, அடிநாதமாக பல நூற்றாண்டுகளாக விளங்கிவரும் பௌத்த பீடம், அதன் மேலாதிக்கம் என்பவை சிதைந்தால் மட்டுமே சிறிலங்காத் தீவில் உண்மையான அமைதியும்,

சமாதானமும் நிலவும் என்பது வெளிப்படை. ஆனால், அதற்கான வாய்ப்பு இன்றுவரை வெகுக் குறைவாகவே உள்ளது. ஆனால், இன்றைய மக்கள் எழுச்சியை அதனை நோக்கியதாகக் கொண்டு செல்ல வேண்டிய கடப்பாடு, இன்றைய இளைஞர் எழுச்சியின் பின்னணியில் செயற்படுபவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டிய விடயம்.

மறுபுறம், வெளிநாட்டு நிதியுதவிகள் சொற்ப அளவில் இந்தியாவில் இருந்தும், சீனாவில் இருந்தும் கிடைத்த போதிலும், அவை சிறிலங்காவில் நிலவும் நெருக்கடியைத் தீர்ப்பதற்குப் போதுமானதாக இல்லை. சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் கூட எதிர்பார்க்கப்படும் கால இடைவெளியில் கிடைக்குமா? என்பது நிச்சயமற்றதாக உள்ளது. அன்றாட நுகர்வுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு தொடர்ந்து அதிகரித்து வருகின்றமை ஒருபுறம் இருக்க, அரச ஊழியர்களுக்கான சம்பளம் உள்ளிட்ட கொடுப்பனவுகளை வழங்குவதில் அடுத்துவரும் மாதங்களில் அரசாங்கம் பாரிய நெருக்கடியைச் சந்திக்கும் அபாயம் உள்ளமையை மறுத்து விடுவதற்கில்லை.

இத்தகைய நெருக்கடி நிலையிலும் பரந்துபட்ட அடிப்படையில், இனவாதத்தைத் துறந்து, அறிவியல் பூர்வமாகச் சிந்தித்துச் செயலாற்ற விரும்பாத நிலையிலேயே ஆட்சியாளர்கள் உள்ளனர். மக்களின் விருப்பு, வெறுப்புகள் பற்றிக் கிஞ்சித்தும் கவலை கொள்ளாத ஆட்சியாளர்களிடம், இதைவிட வேறு எவ்வகையான பிரதிபலிப்பை எதிர்பார்க்க முடியும்?

சிறிலங்காவில் அடுத்து என்ன நடைபெறும்? என்பதை அறிந்து கொள்வதில் உள்நாட்டில் வாழும் மக்கள் மாத்திரமன்றி, புலம்பெயர் நாட்டில் வாழும் மக்களும் அதிக ஆர்வம் கொண்டுள்ளார்கள். ஆனால், ஊடகங்கள் குழப்பமான செய்திகளையே தொடர்ச்சியாகத் தந்து கொண்டிருக்கின்றன. கொள்கை அடிப்படையில் எந்த அணி சார்ந்து ஊடகங்கள் செயற்படுகின்றன என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை. ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள் ஒரே ஊடகத்தில் அருகருகே இடம்பெறும் போது, வாசகன் எத்தகைய அனுமானத்தை மேற்கொள்வது என்பதில் சிக்கல் எழுகின்றது. ஏற்கனவே குழம்பிப் போயுள்ள மக்களை, மேலும் குழப்புவனவாகவே ஊடகங்கள் உள்ளன.

சிறிலங்காவின் நிலவரம் தெளிவான ஓர் முடிவுக்கு வருவதற்கான அறிகுறிகள் சிறிதேனும் தென்படவில்லை. அது மென்மேலும் குழப்பத்தை நோக்கியதாகவே பயணிக்கும் வாய்ப்பு உள்ளது. இந்நிலையில், முடிவு என்னவாகும்? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.




மனோ

# ஜெகத் கஸ்பார் தமிழனைக் காட்டிக் கொடுப்பார், தமிழர் நாங்கள் கை தட்டனுமாம்!



# செக்கியூரிட்டி செக்கியூரிட்டி

காட்டிக் கொடுப்புகளின் இரட்சகர் ஜெகத் கஸ்பராஜ், ஈழத் தமிழ் மக்களை ஆரிய திராவிடத்தின் அடிமைகளாகக் கட்டிப் போட எடுத்த முயற்சியை, இலண்டன் வாழ் ஈழத் தமிழ் உறவுகள் தக்க பாடம் புகட்டி வைத்த சேதி, எமக்கெல்லாம் காதிலே தேனாக இனிக்கிறது. எங்கள் இன அழிப்பில் துணை போனதும் அல்லாமல், புலம்பெயர் ஈழத் தமிழர்களின் கடின உழைப்பையும், அதன் மூலம் சேர்த்துள்ள செழிப்பான வளங்களையும், இந்திய திராவிட ஆரிய கொள்ளையர் கொலையாளிகளின் கொத்தடிமைகளாக்க அவர் வகுத்துச் செய்த சதித் திட்டத்தை உடைத்துத் தவிடு பொடியாக்கியது இலண்டன் தமிழ் முனைவோர் ஒருங்கிணைப்பு மாநாடு.

இனிமேல் இதுபோன்ற கயமைத்தனங்களை யாரும் உலகின் எந்த மூலையில் அரங்கேற்ற முற்பட்டாலும் இதுதான் முடிவு என்கிற எச்சரிக்கை மணியாக இந்நிகழ்வு அமையட்டும். புலிகளை அழிக்க உதவியதும் அல்லாமல், 'அவர்களும் பிழை விட்டார்கள் அவற்றை நாம் மன்னிக்க வில்லையா!' என்கிற அகம்பாவப் பேச்சும் கனேடிய ஈழத் தமிழரின் திராவிடம் பெரியார் பற்றியப் புரிதலைத் தட்டையான சிந்தனை என விமர்சிக்க, அத்தனை கூர்மையான அறிவு முட்டாளாக அவர் பேசி 'செக்கியூரிட்டி செக்கியூரிட்டி' என்று அவரிடம் கேட்டக் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியாமல், ஓலமிட்ட அவலத்தை அகிலமே அறிய வைத்தது அந்த நிகழ்வு.

1983, யூலை மாதம் இலங்கை அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் ஈழத் தமிழ் மக்கள் மீது நடத்தப் பட்ட 'கறுப்பு யூலை' இனக் கலவரத்தின் பொழுது, பிலிப்பைன் நாட்டு தலைநகரிலிருந்து, இந்தியாவின் கத்தோலிக்கத் திருச்சபையால் நடத்தப்படும் உண்மைகள் என்கிற அர்த்தம் கொண்ட வெரித்தாஸ் எனப்படும் வானொலியில், நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் குரலை ஒத்தக் கவர்ச்சியுடன் ஒரு குரல் ஈழத் தமிழர்களின் இதய வலிகளைப் போக்கும் அரு மருந்தாக ஒலித்தது.

அதனுடன் ஈழத் தமிழர் எளிதில் தொடர்பு கொள்ள வசதியாக, மட்டக்களப்பில் உள்ள கத்தோலிக்க அமைப்பின் அஞ்சலக முகவரி ஈழத் தமிழ் மக்களின் துயரங்களின் வடிகாலாகவும், விளங்கியது. ஒலித்த குரலோ உயிர் காக்கும் அமிர்த சுரபியாகத் தமிழ் மக்களை நம்ப வைத்தது. அந்த நம்பிக்கை 2009 முள்ளி வாய்க்கால் இறுதிக் கட்ட தமிழ் இன அழிப்பு வரை நீடித்தது.

அந்தத் தேவத் தூதனை இந்த நூற்றாண்டின் தொடக்கக் காலப் பகுதிகளில் சுவிஸில் அவரை நான் நேரில் பார்த்த பொழுது நம்ப மறுத்து, வியந்த மனங்களில் அடியேனும் ஒருவன். இளைய ராஜாவின் சிம்பனி குறுந் தட்டுகளின்

விற்பனை தொடர்பாக அவரது வருகை இருந்தது. இளையராஜாவால் ஏற்கனவே அவை ஐரோப்பிய நாடுகளில் அனுப்பப்பட்டு விட்டன என்ற செய்தியால், அந்தத் தெய்வீக முகம் வாடியது கண்டு, மனதுக்குள் இளையராஜாவை திட்டியபடியே மனம் 'இச்சுக்' கொட்டியது.

கத்தோலிக்கத் திருச்சபையின் கபட நாடகங்கள் இலங்கையிலும், வெளி நாடுகளிலும் குறிப்பாகச் செஞ்சிலுவைச் சங்க ஐ.நா.ஜெனீவா தலைவியுடன் 2008இல் பேசிய பின்னர், மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டதின் பலனாக, அமெரிக்க-ஐரோப்பிய நாடுகளின் கத்தோலிக்க மதவெறிக் கொள்கைகள் உலகெங்கிலும் உள்ள மக்களை எப்படி கொலைகள் உட்பட வதைக்கின்றன? என்கிற உண்மைகளைப் படித்தறியத் தொடங்கிய பின்னர் கத்தோலிக்க மதமும், அமெரிக்க அரசுகளும் உலக நாடுகளை எப்படியெல்லாம் பயன்படுத்துகின்றன போன்ற தகவல்களைத் தெரிந்து கொண்டேன்.

குறிப்பாக இலங்கைப் போர் விமானங்கள், அராலியில் உள்ள புனிதப் பேதுருவானவரின் தேவாலயத்தின் மீது குண்டுமழை பொழிந்து, நூற்றுகணக்கில் தஞ்சம் அடைந்த அப்பாவிப் பொது மக்களைக் கொன்ற போதிலும், சிங்களவரான கத்தோலிக்க ஆண்டை வண.ரஞ்சித் மல்கம் மத குரு என்பதை மறந்து, சிங்கள இனவாதியாக செய்திகளை முடக்கி, மகிந்த குடும்பத்துடன் நல்லுறவை வளர்த்து வந்தார். அவரது செல்வாக்கால் மகிந்தர் பல தடவை வத்திக்கானில் பாப்பரசரைச் சந்தித்து, தமது போருக்கான ஆதரவை உலக அளவில் வளர்க்க முடிந்தது. 2019இல் நடத்தப்பட்ட தமிழ் கத்தோலிக்க மக்களைக் குறிவைத்து, கோத்தபாயாவின் ஆதரவுடன் நடத்தப் பட்ட உயிர்த்த ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதலைக் கூட பேராயர் ரஞ்ஜித் உரிய வகையில் கையாளவில்லை என்பதை எவரும் அறிவர். போர் முடிந்தது என அறிவித்தது, பொய் எனத் தெரிந்தும் புனி பாப்பரசர் இலங்கை சென்று மகிந்த அரசைப் பெருமைப்படுத்தினார்.

இத்தகைய மன நிலைதான் பெரும்பான்மையான கத்தோலிக்க, கிருஸ்தவ தமிழ் மக்களிடையே நிலவியது. புலிகளின் விடுதலைப் போராட்டம் இன வாதம், இந்து மதவாதம் எனப் பிரச்சாரம் செய்வதில் கத்தோலிக்கத் திருச்சபையும், அதன் பிரச்சாரப் போதகர்களும் மிகப் பெரிய வெற்றிகளைக் குவித்தனர் என்பதற்கு உலகத்







Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

எமது புதிய கிளை
EO Tychboden Parkweg 2
4665 Oftringen
வெகுவிரைவில்...

IMPORTAS
International Foods & Beverages
www.importas.ch
info@importas.ch

மொத்த விற்பனை நிலையம்
Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38 , Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch

தமிழர் பேரவையின் தலைவர் வண. பிதா இமானுவெல் அடிகளாரும், ஜெகத் கஸ்பாரைப் போன்றோர் மக்களால் பார்க்கப் பட்டார்.

எங்கள் இன விடுதலையைக் கையல் எடுத்து, உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பை உருவாக்கி, அதனைத் தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் கிளை பரப்பி, உலகப் பேரமைப்பாக எமது இன விடுதலைக்காகப் போராடப் போவதாக ஒரு மாயத் தோற்றத்தை இலண்டன் ஐ.பி.சி . தமிழ் வானொலி ஊடாகத் தமிழ் மக்கள் மனதில் நம்பிக்கை வளர்த்தார்.

ஆனால் அவரால் சந்திரிகா அரசு நடத்திய அராலித் தேவாலய விமானக் குண்டு வீச்சைக் கூட, வத்திக்கான் பாப்பரசரின் காதில் போட முடியாத நிலையைத்தான் கண்டோம். அதே நேரத்தில் அவரது உலகத் தமிழர் ஒன்றியம், அதன் வலைத் தளத்தில் ஆங்கிலத்தில் என்ன சொல்கிறது? என்பதை, அகரம் வாசகர் அறியத் தமிழில் தருகிறோம்.

‘ எமது சர்வ தேசப் பிரச்சாரமும் , செயற்பாடுகளும் போரின் பின்னர் உருவாக்கப் பட்ட தப்பபிப் பிராயங்களை எதிர் கொள்வதில் மிகப் பெரும் முக்கியம் வாய்ந்தவை. இந்தப் போரின் முடிவு தீவில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் துயரங்களுக்கு, ஒரு நியாயமான தீர்வு எற்படுத்தி விட்டது. அதனால் தீர்மானம் தேவை இல்லை என்கிற புரிதலாக அது இருந்தது.

ஒரு சிறப்பான வரையறுக்கப் பட்ட வகி பாகத்தை மேற்கொண்டு, சர்வதேச பிரச்சாரம் செய்யும் புலம் பெயர் அமைப்புகளிடையே அமைதிக்கான சர்வதேச அரங்கில் அரச பிரதிநிதிகள் மற்றும் முக்கிய அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் நம்பிக்கை பெற்ற அமைப்பாக இது உள்ளது.

70 கோடித் தமிழ் மக்களின் தாயகமாக இருப்பதால் , பிராந்திய வல்லரசாக உலக அரங்கில் அதிக தாக்கம் கொண்டு விளங்கும் இந்தியாவுடன் சேர்ந்து இயங்குவது, எமது செயற்திட்டத்தின் கருப் பொருளாக இருக்கிறது. உலகத் தமிழர் ஒன்றியம் இந்தியாவில் தமிழ்நாடு உட்பட எல்லா தரப்பினருடனும் தொடர்ந்தும் செயற்படும்.

நாங்கள் ஐ.நா.செயலர் பான் கீ மூன் , ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் டேவிட்


**Dortmund மாநகரில்....**

**தமிழர் அரங்கம் கல்விக் கூடம்**




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33, 0231 950 979 00**

கமரோன், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள், தென் ஆபிரிக்க அரசு, இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, அமெரிக்க துணை செயலர் நிஷா பிஸ்வால் அரச அமைச்சர்கள், உலகின் தூதரகப் பிரதிநிதிகள் மற்றும் வேறு பலருடன் சந்திப்புகளை நடத்தி உள்ளோம்.



மறைந்த மன்னார் பேராயர் அருட்தந்தை வண.இராயப்பு யோசேப்பு

இத்தனை வருடங்களாக இவ்வளவையும் சாதனைகளாகப் பட்டியலிடும் இந்த அமைப்பும், தமிழர்களின் அரசியல் தீர்வு என்ன? என்பதையும் வண.இமானுவல் அடிகளாரும் அவரது அமைப்பும் தமிழ் மக்களுக்குச் செய்த நன்மை என்ன? என்பதை இவர்களால் சொல்ல முடியவில்லை.

மறைந்த மன்னார் பேராயர் மட்டும் தமது அருட் பார்வையை இவர்களைப் போல செலுத்தாது விட்டிருந்தால், 1,72,000 அப்பாவித் தமிழ் மக்கள் சாட்சிகளின்றி அழிக்கப்பட்ட உண்மை உலகின் கண்களிலிருந்து முழுமையாக மறைக்கப் பட்டிருக்கும். இவரைப் போன்று மண்ணில் மக்களுடன் போரினை எதிர் கொண்டு, இராணுவத் தாக்குதல்களால் தம் இன்னுயிர்களை இழந்த மன்னாரில் அருட் சகோதரர் செபஸ்டியான் வண.பிதா சிங்கராயர் போன்ற பல கத்தோலிக்க அன்பர்களும் செய்த தியாகங்களைத் தமிழ் மக்கள் மறந்து விட முடியாது.

இவர்களுடன் ஒப்பிடும் பொழுது, அருட் தந்தை ஜெகத் கஸ்பாரின் செயற்பாடுகள் தொடக்கத்தில் இருந்தே அமெரிக்க, இந்திய உளவுப் படைகளின் முகவராகச் செயற்பட்டு புலிகள் அமைப்பையும், தமிழ் மக்களையும் வஞ்சித்து விட்டார் என்பதை 2009இன் தொடக்கம், அவரது பேச்சுகளும், நடவடிக்கைகளும் திராவிடத்தைத் தமிழர் மீது திணித்தும், ஈழத் தமிழரின் தாயக மீட்பின் உயிர் நாடியான தமிழ்த் தேசியத்தை அழிப்பதையே இலட்சியமாகக் கொண்டு செயற்படுவதைத் ஈழத் தமிழினம் ஒருநாளும் அனுமதிக்காது.

கனடாவிலிருந்து கருத்தாழம் கொண்ட அரசியல் காணொளிப் பதிவுகளை வெளியிட்டு வரும் ஈழத் தமிழன் ஜீவனை, இலண்டன் மாநாட்டில் தனிமனித விமர்சனம் செய்த கஸ்பாரின் செயலை யாரும் கண்டிக்காமல் இருக்க முடியாது. கஸ்பரின் மடியில் கனம் இல்லையென்றால், அவருக்கு வழியில் பயம் ஏன் வரவேண்டும்? பல நாள் கள்வன் ஒருநாள் பிடிபடத்தானே வேண்டும்.!

ஈழத் தமிழரை இனியாவது நிம்மதியாக வாழ விடுங்கள். சிங்களவருடன் உள்ள தகராறை நாங்களே தீர்த்துக் கொள்வோம். உங்களின் அகண்ட பாரத சாம்ராஜ்ஜியத்தை உங்களோடு வைத்துக் கொள்வதே நல்லது.



CENTURY
TRAVELS

# SUMMER 2022

## Frankfurt Direct Flights



இந்தியாவுக்கான விசா
ஒழுங்கு செய்து தரப்படும்



**5 STAR SERVICE**

சிறப்பு சலுகை விலை

**MÜNCHEN COLOMBO**
**BERLIN COLOMBO**

திகதி மாற்றம்
இலவசம்

**Date Change**
**FREE**

4 கிழமைக்குள் பணம்
திருப்பித் தருதல்

**Refund Within**
**4 WEEKS**

இலங்கை விசா
~~60~~ 40

**Srilanka Visa**
~~60~~ 40

பதிவேற்றம் (Declaration Form)
Self Declaration Form
**Corona Travel Information**



**Nishanthan 0176 2168 2149**

0231 58 96 557 | 0231 55 74 319

Rheinische Str.29-44137-Dortmund | www.centurytravels.de | info@centurytravels.de



BOX
ONE MONTH FREE
TALK TIME TO 132
COUNTRIES, INCLUDING
INDIA AND SRILANKA,
FOR EVER
V BOX PURCHSED IN
GERMANY.
SUPER
SALE
IN GERMANY
FREE
TALK
TIME
119 €
CALL
ONLY
+49 1514 6978484